Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ மாசி 11 ஆம் நாள் ரம்ழான் 16 (22-2-62) வியாழக்கிழமை இதழ் 1

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# தடுப்புக்காவலிலுள்ள மூவர் ஆட்சேபம்

## ஆலோசனைச் சபை முன் வழக்கறிஞருடன் ஆஜர்

### சிட்னிசார்பில் ஜி. ஜி. ஏற்பட்டார்

கொழும்பு, புதன்

தோல்வியில் முடிவடைந்த சதித்திட்டம் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸி. ஸி. திஸநாயக்காவும் சிவில் சேவையைச் சேர்ந்த திரு. டக்ளஸலியனகேயும் தங்களைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கு நேற்று ஒரு ஆலோசனைச்சபைமுன் ஆஜரானார்கள். திரு. சிட்னி டி' சொய்சா இன்று ஆஜரானார்.

ஜனவரி 27-ந் திகதி கண்டுபிடிக்கப்பட்ட சதித்திட்டம் சம்பந்தமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்வதற்காக அவசரகாலச் சட்டத்தின்கீழ் இந்த ஆலோசனைச்சபை நிறுவப்பட்டுள்ளது.

இச்சபையில் நீதிஅமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி திரு. டி. விமலரத்தின கலாசார விவகார இலாகா டைரக்டர் திரு. எம். ஜே. பெரேரா ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஈ. ஏ. வி. டி' சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**வழக்கறிஞர்கள் ஆஜரானர்கள்**

தம்மைத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கு திரு. ஸி. ஸி. திஸ்ஸநாயக்கா சபைமுன் தோன்றி ஆட்சேபனை தெரிவித்தார். இவர் சார்பில் திரு. ஈ. ஜி. விக்கிரமநாயக்கா கியூ. ஸி. திரு. ஆர். ஏ கன்னங்கரா ஆகிய வழக்கறிஞர்கள் ஆஜரானர்கள். திரு. லியனகேயின் சார்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை. வழக்கறிஞரை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவகாசம் இல்லாது போய் விட்டதே இதற்குக் காரணம்.

**சிட்னி சார்பில்திரு ஜி.ஜி.**

சதித்திட்டத்தில் ராணுவத்துக்கும் பொலிசுக்கும் இணைப்பு அதிகாரியாக விளங்கினரென்று சமீபத்தில் அரசாங்கம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டவரும் முன்னள் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுமான திரு. சிட்னி டி' சொய்சா இன்று ஆலோசனைச்சபைமுன் ஆஜரானர். திரு. சொய்சாவின் சார்பில் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. ஆஜரானர்.

**20 தினங்களுக்குள் தெரிவிக்க வேண்டும்**

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவர் தாம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்க விரும்பினல் ஆலோசனைச்சபைக்கு 20 தினங்களுக்குள் எழுத்து மூலம் ஆட்சேபம் தெரிவித்துக் கொள்ளலாம். இந்த ஆட்சேபனையை சபைபரிசீலனை செய்யும் பொழுது ஆட்சேபம் தெரிவித்தவர் வழக்கறிஞருடன் முன் ஆஜராகலாம்.

## நகர அபிவிநத்திக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு புதிய மேயர் கோருகிறுர்

### பல இடங்களுக்கும் நேரில் விஜயம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயர் திரு. எம். ஜேக்கப் தமது பொறுப்புக்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் ஏற்றுக் கொண்டார். அவர் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து மாநகர சபை அங்கத்தவர்களும் பொதுமக்களும் அவருக்குப் பாராட்டுதல்கள் தெரிவிப்பதற்காக வந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண எம். பி. திரு ஏ. டி. துரையப்பா, உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் ஆகியோர் உட்பட மாநகரசபை அங்கத்தவர்கள் மேயருடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

தாம் பொறுப்பேற்ற சில மணி நேரத்திற்குள் அவர் மாநகரசபை பகுதி தலைவர்களை அழைத்து ஒரு மகாநாட்டை நடத்தினர்.

அன்றே புதிய மேயரும் அங்கத்தவர்கள் சிலரும் நகரின் முக்கிய இடங்கள் பலவற்றிற்குச் சென்று பார்வையிட்டனர். பெரியகடைக்கு விஜயம் செய்த இவர்கள் அங்கு ஏற்படுத்த வேண்டிய அபிவிருத்திகள் பலவற்றைப்பற்றியும் முக்கிய பிரமுகர்களுடன் பேசியதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்கள் எம். பிக்கள் ஆகியோரின் உதவியுடன் தான் நகரின் அபிவிருத்தியைச் செய்ய முடியுமென்றும் இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குவார்களென தாம் எதிர்பார்ப்பதாகவும் புதியமேயர் நம்பிக்கை தெரிவிக்கிறுர்.

ஒவ்வொரு மாதமும் ஒரு நாளில் பத்திரிகையாளர் மகாநாட்டை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கான குறிப்பிட்ட நாளொன்றைத் தாம் மிக விரைவில் அறிவிப்பதாகவும் புதியமேயர் திரு. ஜேக்கப் தெரிவித்தார்.

## தென்னிந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதியாகும்

கொழும்பு, புதன்

உள்நாட்டில் உப்பு உற்பத்தி மேலும் குறைந்து வருவதால் மேலும் அதிக அளவில் வெளிநாட்டிலிருந்து உப்பு இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

சென்ற வருடக் கடைசியில் அரசாங்கம் பாகிஸ்தானிலிருந்து 10,000 தொன் உப்பை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்த உப்புகொழும்பு த்துறைமுகத்தில் கப்பலிலிருந்து லொறிக்கு இறக்கி ஏற்றிய செலவு உப்புவாங்கியசெலவை விட அதிகமாக இருந்ததாகப் பின்னர் தெரியவந்தது.

இப்பொழுது தென்னிந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. பெரிய வத்தைகள் மூலம் தென்னிந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்யலாமென்று இது செலவு குறைவாக முடியுமென்றும் கருதப்படுகிறது. ஒரு வத்தையில் 150விருந்து 200 தொன் உப்பு ஏற்றலாம்.

## சிவன்கோவில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

இன்றுதொடக்கம் வண்ணர்பண்ணை சிவன்கோவிலில் விசேஷமாய் அமைக்கப்பட்ட யாகமண்டபத்தில் பூஜையும், வெள்ளிக்கிழமை காலையில் சங்காபிஷேகமும், இரவு இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

---

## பொருட்காட்சி ஒத்தி வைக்கப்படலாம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்விநோதக் கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சி காலவரையறையின் றிஒத்திவைக்கப்படலாமெனத் தெரிகிறது. அடுத்த மாத ஆரம்பத்தில் நடாத்தவிருந்த இப்பொருட்காட்சியை ஒத்திவைக்குமாறு மாநகரசபை அங்கத்தவர்கள் சிலர் கேட்டிருப்பதாகவும் இவ்விஷயம் சனிக்கிழமை நூல்நிலையக் சமிட்டிக் கூட்டத்தில் ஆராயப்படுமெனவும் தெரிகிறது.

**தமிழ்நாடு தேர்தல்**

## முடிவுகள் அறிய விசேஷ ஒழுங்கு

தமிழ்நாட்டு தேர்தல் முடிவுகளை சென்னை வானெலி நிலையம் விசேஷ ஒழுங்கு செய்துள்ளது. இதன்படி இம்மாதம் 25-ந் திகதி தொடக்கம் காலை 8-15 க்கும் மாலை 6-05 க்கும் இரவு மணிக்கும் தேர்தல் முடிவுகளைக் கேட்கலாம். இதை திருச்சிவானெலி நிலையம் அஞ்சல்செய்யும். தமிழ்நாடு தேர்தல் முடிவுகளை அறிந்துகொள்வதற்கு தகவல் இலாகா விசேஷபிரிவு ஒன்றையும் ஒழுங்கு செய்துள்ளது. சென்னை 171-இலக்கத்துக்கு டெலிபோன் செய்தால் தமிழ்நாடு தேர்தல் முடிவுகளையும் இந்தியாவின் முக்கிய தேர்தல் முடிவுகளையும் அறிந்து கொள்ளலாம்.

## அமெரிக்காவுக்கு குருஷ்சேவ் வாழ்த்து

மாஸ்கோ, பெப். 21

அமெரிக்க வானவெளிமனிதன் கேணல் ஜோன்கிளன் வெற்றிகரமாக பூமியை மூன்று தடவை சுற்றிவந்து சேர்ந்ததற்கு சோவியத் பிரதமர் குருஷ்சேவ் அமெரிக்காவுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். வானவெளி ஆராய்ச்சியில் சோவியத்—அமெரிக்க நிபுணர்களும் ஆராய்ச்சி முடிவுகளும் ஒன்று திரட்டப்பட வேண்டும் என்ற யோசனை தெரிவித்துள்ளார்

## பொன் விழா

அகலவத்தை ரப்பர் ஆராய்ச்சி நிலையம் அதன் பொன் விழாவை இன்று கொண்டாடியது. காணி அபிவிருத்தி மந்திரி திரு சி. பி. டி' சில்வா இந்த விழாவில் கலந்து கொண்டார்.

## பிரதமர் சிறிமா வாழ்த்து

கொழும்பு, புதன்

அமெரிக்க வானவெளிப் பிரயாணத்தின் வெற்றியைப் பாராட்டி இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அமெரிக் ஜனதிபதி கென்னடிக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் இன்று ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பினர்.

## மார்ச் 6-ல் செனட் கூட்டம்

கொழும்பு, புதன்

செனட்சபை மார்ச் 6ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---



## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தா

கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

### வாடகைக்கு

கடையும், பலசரக்கு கடைக்குத் தேவையான முழுத் தளபாடச் சாமான்களும் வாடகைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். எம். வெள்ளைச்சாமி செட்டியார், 15|18, மின்சார நிலையம் வீதி, )ஆஸ்பத்திரிக்குப் பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

---

## யாழ்ப்பாண மாநகரசபை

### பிரசித்த ஏலவிற்பனை

### இறைச்சிக்கடை-குத்தகை

### பெரியகடை, யாழ்ப்பாணம்

பெரியகடையிலிருக்கும், இல. 4, 7, 11, 12 கொண்ட ஆட்டிறைச்சிக் கடைகள் 1-3-62 தொடக்கம் 31-12-62 வரை குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கின்றன. மேற்படி குத்தகை பிரசித்த ஏலவிற்பனை மூலம் 27-2-62 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குப் பெரியகடையில் விற்கப்படும்.

கூடியகேள்விக்காரர் 28-2-62 திகதிக்கு முன்னர் முழுப்பணத்தையும் கட்டி 1-3-62ந் திகதி தொடக்கம் கடையைப்பொறுப்பேற்கவேண்டும். அத்துடன், கூடிய கேள்விக்காரர் உத்தரவுச் சீட்டுக் கட்டணமாக ஒவ்வொரு கடைக்கும் ரூ. 85 ஐயும் மூன்றுமாத வாடகை முற்பணம் ரூ. 180 ஐயும் செலுத்துவதுடன், 10 ரூபா முத்திரை பொறிக்கப்பட்ட உறுதிப் பத்திரமொன்றும் மாநகரசபையுடன் எழுதிக்கொள்ளவேண்டும். அத்துடன் 31-12-62ல் கடையைத்திருப்பி மாநகர சபையிடம் ஒப்படைப்பதாக ஓர் உடன்படிக்கையும் எழுதிக் கொள்ளவேண்டும்.

ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பம் செய்யலாம். தற்போது இறைச்சிக் கடைகள் வைத்திருப்போருக்கு கடைகள் ஏலத்தில்கொடுக்கப்படமாட்டாது.

இதரவிபரங்களை மாநகர சபை, நானாவித இறைவரிப்பகுதியிலிருந்து அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்,

யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,

யாழ்ப்பாணம்,

17-2-62.



---

# மட்டக்களப்பில் ஐக்கிய நாடுகள் கிராம அபிவிருத்திக் குழுவினர்

## கிராமங்கள்தோறும் அமோக வரவேற்பு

மட்டக்களப்பு, புதன்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் கிராமாபிவிருத்திக் குழுவினர் கடந்த வாரம் மட்டக்களப்புக்கு வந்திருந்தனர். இவர்களுக்கு கிராமங்கள் தோறும் அமோக வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் கிராம அபிவிருத்திக் குழுவிற்கு, இந்தியாவைச் சேர்ந்த காந்தியன் கல்வி ஸ்தாபனத்தின் டைரக்டர் பேராசிரியர் திரு. டி. கோஷ் தலைமை தாங்கினார். மற்றும் டாக்டர். மெயின்ஸ், வாஷிங்டனிலுள்ள 'ஹார்வர்ட்' சர்வகலாசாலையின் சமூக சேவை பேராசிரியர் டாக்டர் கரோலின் வெயர், இலங்கை சமூக சேவைப் பகுதி உதவி டைரக்டர் திரு. ஜி. எச். எப். வெலிக்கல ஆகியோர் இக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இவர்கள் தமது மட்டக்களப்பு விஜயத்தின்போது, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஏருவூர், பன்குடாவெளி ஆகிய கிராமங்களுக்குச் சென்று கிராம முன்னேற்றம சம்பந்தமாக ஆராந்தனர். ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள, பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களோடு கிராம முன்னேற்றம், மீன்பிடி அபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில், விவசாயம் முதலியவைகளையிட்டுக் கருத்தரங்கம் நடத்தினர். செல்வி. டாக்டர் கெரோலின் முக்கியமாக பெண்களின் தேவைகள் பற்றியும், அவர்களது முன்னேற்றத்திற்கான வழிகள் பற்றியும், கிராமப் பெண்களோடு நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐக்கிய நாடுகள் கிராமாபிவிருத்திக் குழுவினர் மட்டக்களப்பின் வட பகுதியிலுள்ள ஏருவூர்பற்று, பங்குடா வெளிக்குச் சென்றபோது பல்வேறு திறப்பு விழாக்கள் நடைபெற்றன. பங்குடா வெளி பெண்கள் கிராம முன்னேற்றச் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட மண் பொருள் தொழிற்சாலையை டாக்டர். கெரோலின் வெயர் திறந்து வைத்தார். கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய மண்டபத்தைப் பேராசிரியர் திரு. டி. கோஷ் சம்பிரதாய முறைப்படி குத்து விளக்கேற்றித் திறந்து வைத்தார். விவசாய கைத்தொழில் பொருட் காட்சியை இலங்கை கிராமாபிவிருத்திப் பகுதி உதவி டைரக்டர் திரு. ஜி. எச். எப். வெலிக்கல திறந்துவைத்தார்.

மட்டக்களப்பு கிராமப்புறங்களில் பண்டுதொட்டுச் சிறப்புற்று விளங்கும் மட்டக்களப்பு நாட்டுக் கூத்து, வசந்த நடனம், கிராமிய நடனம் ஆகியவைகளையும் இக்குழுவினர் பார்வையிட்டனர். மட்டக்களப்புப் பகுதியில் தாம் கேட்ட பெண்களின் "குரவையொலி" தம்மைப் பெரிதும் கவர்ந்ததாகவும், என்றும் அதை மறக்க முடியாதெனவும் இக் குழுவினர் தெரிவித்தனர்.

---

## கள் இறக்குவதற்கு தடை

### சுழிபுரம் கிராமசபை தீர்மானம்

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் கிராமசபை கள் இறக்குவதை தடை செய்யும் விஷயத்தில் வழக்கம்பரை அம்மன் கோவிலையும், சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தையும் அண்டியிருக்கும் பொது ஸ்தாபனங்களையும் உள்ளிட்ட இடங்களிலும் சங்கியக்காட்டுச் சந்தைக்குள்பட்ட இடங்களிலும் கள் இறக்குவதை தடை செய்யும்படி யாழ்ப்பாணம் கலால் இலாகாவுக்கு அறிவிக்க வேண்டுமென ஜனவரி 31-ந் திகதி நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விக்ரோறியாக் கல்லூரியை அண்டி இருக்கும் இடங்களில் கள் இறக்குவதைத் தடை செய்யும்படி குறிப்பிடவில்லை என சுழிபுரம் கிராமசபை அறிவித்துள்ளது.

---

## குஜராத்தில் தேர்தல் ஆரம்பம்

புதுடில்லி, பெப். 21

குஜராத்திலும், மத்திய நிர்வாகப் பிரதேசமான திரிபுராவிலும் இன்று தேர்தல்கள் ஆரம்பமாயின.

---

# பாடசாலைகளில் 'பணிஸ்' வழங்கும் பொறுப்பு

## வேண்டாம் என ஆசிரியர்கள் கோரிக்கை

கொழும்பு, புதன்

பாடசாலைக் குழந்தைகளுக்கு மத்தியான போசனமாக வழங்கப்படும் இலவச பணிஸ் விநியோக பொறுப்பிலிருந்து தங்களுக்குவிலக்களிக்கும்படி இரு பெரிய ஆசிரியர் சங்கங்கள் கேட்டுள்ளன. இவ்விரு சங்கங்களிலும்சுமார் 25,000 அங்கத்தவர்கள் இருக்கின்றனர்.

நேற்று, தேசிய கல்வி கமிஷனின் உபகமிட்டி முன்னிலையில், இரு சங்கங்களும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இத்திட்டத்தின் நிர்வாகம், கல்வி அமைச்சில் இருந்து ஸதலஸ்தாபன அமைச்சுக்கு மாற்றப்படல் வேண்டும். பணிஸை தயார் செய்வதற்கு நாட்டின் மத்திய இடங்களில் பேக்கரிகள் திறக்கப்படல் வேண்டும். புதிய கிளாஸ்களும், சோப்பைகளும் வழங்கப்படல் வேண்டும். பால், சீனியுடன் சேர்ந்து கொடுபடல் வேண்டும்

லங்கா ஜாதிக குரு சங்கமய, ஸ்ரீலங்கா ராஜ்ய குரு சங்கமய என்ற இரு சங்கங்களுமே மேற்கண்ட சங்கங்களாகும்.

---

மேற்கு வங்காளத்தில் நேற்று இரு சிறிய சம்பவங்கள் ஏற்பட்டன. பந்துவான் என்றஇடத்தில் ஏற்பட்ட ஒரு தேர்தல் கைகலப்பில் ஒருவர் காயமடைந்தார். திதாகட் என்ற இடத்தில் ஓட்டுச்சாவடிக்கருகே ஒரு வெடிவெடித்தது. இதனால் ஓட்டுப் பதிவு பாதிக்கப்படவில்லை.

---

# 'பெட்டிசம்' போட்டதாக எதிரி என்னை சந்தேகித்தார்

## அசிட் வீசியதான வழக்கில் கான்ஸ்டபிள் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன் துறை பொலிஸ் விடுதியில் சென்ற வருடம் நவம்பர் மாதம் 7-ம் திகதி நள்ளிரவு பொலிஸ் கான்ஸ்டபிள் மகேந்திரசிறி நித்திரை செய்கையில் அவரை அசிட் வீசி கொலை செய்ய முயன்றதாய் சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜி. டி. ஈ. விக்கிரமசுந்தரா மீது காங்கேசன் துறை பொலிஸ் சுப்ரிண்டனால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி' தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மகேந்திரசிறியின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

மகேந்திரசிறி தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

கடந்த வருடம் மார்ச் மாதம் 5-ம் திகதி காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் கடமை யேற்றேன். அவ்வருடம் அக்டோபர் 15-ம் திகதிவரை எதிரியும் அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்தார். 15-10-61-ல் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அவர் மாற்றலாகிச்சென்றார். எதிரிக்கு எதிராக உதவி பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு ஒரு 'பெட்டிசம்' யாரோ அனுப்பியிருந்தார்கள். இவ்விஷயமாய் எதிரி என்னைச் சந்தேகித்தார். இதனால் என்னை ஒரு நாள் கத்தியால் குத்துவதாகப் பயமுறுத்தினர். இதுபற்றி நான் உதவி பொலிஸ் சுப்பிரிண்டனுக்குப் புகார் செய்தேன்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 7-ம் திகதி இரவு 11 மணியளவில் படுக்கைக்குச் சென்றேன். சடுதியாக நான் எனது கண்களைத் திறக்கமுடியாதபடி எனது கண்களில் ஏதோ எரிவதை உணர்ந்தேன். அப்பொழுது திராவகம் (அசிட்) மணம் வீசியது. திராவகம் விசப்பட்டதைத் தொடர்ந்து ஓர் நபர் ஓடுவதையும் அதன் பின் ஓர் கார் புறப்படுவதையும் நான் உணர்ந்தேன். நான் 'லைட்' போடுவதற்காக சுவிச்சைப் போட்டபோது 'லைட்' எரியவில்லை. 'ஐயோ எனது கண்ணுக்குள் யாரோ எதையோ வீசிவிட்டு ஓடுகிறார்கள்' எனக் கத்தினேன். பொலிஸ் கான்டஸ்பிள் திஸநாயக்கா எனக்கு உதவிசெய்ய முன்வந்தார். திராவகத்தின் வலியைத் தாங்கமுடியாமல் நான் கடலுக்குள் விழச் சென்றபோது திஸநாயக்கா என்னைத்தடுத்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றார். இச்சம்பவம் இரவு ஒன்றரை அல்லது இரண்டு மணியளவில் நடந்தது.

நான் பொலிஸ் ஜீப்பில் முதலில் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். எனது வாக்குமூலத்தை இன்ஸ்பெக்டர் நூடின் பதிவுசெய்தார். நான் எதிரியைச் சந்தேகித்ததால் அவர்தான் இச்செயலைச் செய்திருக்கவேண்டுமென பொலிசாரிடம் கூறினேன். 8-11-61-ம் திகதி காலை 6-30 மணியலவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன்.

பின்னர் 9-ம் திகதி நண்பகலில் நான் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். அங்கிருந்து பொலிஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன். எனது வலது கண் நன்றாகப் பார்க்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இடது கண் பார்க்க முடியாதபடி எந்த நேரமும் கண்ணீர் சிந்தியபடி இருக்கிறது. பொலிஸ் கான்ஸ்டபிள்களான குமாரதிசா, குணத்திலகா, பியதாசா ஆகியோருக்கு எதிராகவும் ஏ. எஸ். பியிடம் புகார் செய்துள்ளேன்.

இந்நிலையில் நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

# உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 11ந் தேதி வியாழக்கிழமை (22-6-62) இரவு 1-'4 வரை திருதியை. பகல் 12-22 வரை உத்தரம். பின் அத்தம். பகல் 12-22 வரை மரணயோகம். பின் சித்தயோகம். மாலையில் சுபகருமங்களுக்கு நலம்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு சுமாராக நற்பலன்களும், கஷ்டபலன்களும் கலந்துநடக்கஇடமுண்டு. முதற்பகுதி நடுத்தரபலன் - இடைப்பகுதி நற்பலன் அபிவிருத்தியடையும். ஆண்டு இறுதியும் பின்னரும் விசேடபலன் நடக்கும். பொதுவாகத் தொழில் நலம், குடும்பநலம், வருவாய் அதிகரிப்பு, நல்லோர்சேர்க்கை வண்டிவாகன லாபம் காணப்படுகின்றன. அதேநாளையில் உடல்நலக்குறைவும், நம்பிமோசமடைதலும் இருக்கும். பெண்களுக்கு நற்பலன்கள்நடக்க இடமுண்டு.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: தொழில்மேன்மை, மதிப்புயர்ச்சி.

பரணி: குடும்ப சுகக்குறைவு, கஷ்டம்.

கார்த்திகை: கடன் விருத்தி, பணவரவு.

ரோகிணி: தாயாதிதொல்லை, மனக்கஷ்டம்.

மிருகசீரிடம்: தொழில் வெற்றி, மதிப்பு.

திருவாதிரை: முதியோர் ஆதரவு, சுபசெய்தி.

புனர்பூசம்: பெண்கள்விரோதித்தல், சஞ்சலம்.

பூசம்: உறவினர் வருகை, கொண்டாட்ட செலவு.

ஆயிலியம்: முதியோர் பகை, அசம்பாவத்தால் நட்டம்.

மகம்: பிதாவழி ஆதரவு, குடும்பநன்மை.

பூரம்: குடும்ப சுகக்குறைவு, செலவு.

உத்தரம்: நல்லோர் நேசம், சுகம்.

அத்தம். தொழில்வெறுப்பு, பணமுடை.

சித்திரை: முதியோர் நட்பு, மதிப்பு.

சுவாதி: குடும்ப சுகம், நிம்மதி.

விசாகம்: ஊழியர் கஷ்டம், கவலை.

அனுஷம்: தொழில் உயர்ச்சி, நல்லவர் உதவி

கேட்டை: சகோதரர்கஷடம், பணமுடை.

மூலம்: ஊழியர் ஆதரவு, லாபம்.

பூராடம்: புதுமுயற்சி, ஏமாற்றமடைதல், செலவு.

உத்தராடம்: குடும்பசுகம், நிம்மதி.

திருவோணம்: பணியாளர் தொல்லை, கஷ்டம், பணமுடை,

அவிட்டம்: மாதாவழி ஆதரவு, சுகபலன்.

சதயம்: அலைச்சல், பணவரவு.

பூரட்டாதி: உடல்நலக் குறைவு, இன்பசிந்தனை.

உத்தரட்டாதி: குடும்பசுகம், நிம்மதி.

ரேவதி: பணமுடை, ஏமாற்றம்.

---



## 'ஈழநாடு' கொழும்புக்கிளை

கொழும்பில் "ஈழநாடு" பத்திரிகையின் விநியோகம் பற்றித் தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்க்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக்காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகி,
ஈழநாடு (கொழும்பு)
சரஸ்வதி மண்டபம்,
லோறன்ஸ் வீதி,
கொழும்பு - 4.

Phone: 81975

The Manager,
EELANADU (Colombo)
Saraswathy Hall,
Lorensz Road,
COLOMBO - 4.

# அமெரிக்க வானவெளி பிரயாணி பத்திரமாக திரும்பினர்

## மேஜர் கிளன் வெற்றிக்கு ரஷ்ய விஞ்ஞானி பாராட்டு

வாஷிங்டன், பெப். 21

**அமெரிக்க வானவெளிப் பிரயாணி மேஜர் கிளன் 3 முறை பூமியைச் சுற்றிவிட்டு இன்றுகாலை 1-31 க்கு பத்திரமாக அட்லாண்டிக்கில் இறங்கினர்.**

வானவெளிக்கு அனுப்பப்பட்ட சிறிது நேரத்திலேயே அவர் கருவிகளை இயக்க ஆரம்பித்தார். அவரைச் சுமந்து சென்ற பேழை, ஆபிரிக்காக் கண்டத்தைக் கடந்து இந்து மகாசமுத்திரத்தின் வழியாக ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்றது. அப்போது அது மணிக்கு 17,000 மைல் வேகத்தில் சென்றதாய் அறிவிக்கப்பட்டது.

"இங்கு சற்று ஆட்டமாய் இருக்கிறது" என்றும், "கொஞ்சம் அதிர்வு வந்துகொண்டிருக்கிறது" என்றும் அனுப்பப்பட்ட சிறிதுநேரத்திற்குப் பின் அவர் கூறினர். அடிவானம் நீலமயமாய் ஜொலிக்கிறது என்றும், மிகப்பிரகாசமான ஒளி தென்படுவதாயும், தான் பிரயாணம் செய்யும் பேழை சிறிது பிறழ்கிறதாகத் தோன்றுகிறதென்றும் அவர் பிரயாணத்தின்போது கூறினர்.

மேஜர் கிளன் புறப்படும் நிகழ்ச்சியை ஜனதிபதி கென்னடி டெலிவிஷனில் கண்டார்.

மேஜர் கிளன் நாலரைமணி நேரத்தில் மும்முறை பூப்பிரதட்சணம் செய்தார். தாம் ஹாவாய்க்குத் திருப்பியனுப்பப்படுவதுபோன்று உணருவதாயும் கிளன் தெரிவித்தார். அவர் இறங்க இருந்த இடத்தில் விமானங்களும், ஹெலிகோப்டர்களும் தயாராய் இருந்தன. இறங்கிய 8 நிமிடங்களில் அவர் கப்பலுக்குக் கொண்டுவரப்பட்டார். அவர் வானத்தில் சென்ற ஆகக் குறைந்த தூரம் 100 மைல். ஆகக்கூடிய தூரம் 160 மைல்.

அமெரிக்க வானவெளி வெற்றியை இதரநாட்டு விஞ்ஞானிகளுடன் தாமும் பாராட்டுவதாய் ரஷ்ய வானவெளி விஞ்ஞானி கூறியிருக்கிறார். அமெரிக்க வெற்றியை பிரிட்டன் உற்சாகமுடன் வரவேற்றது.

## அல்ஜீரியா உடன்பாடு பற்றி டில்லி மகிழ்ச்சி

புதுடில்லி, பெப். 21

அல்ஜீரியாவில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதாய்க் கூறப்பட்டதையிட்டு புதுடில்லியில் வெளி விவகார இலாகா அதிகாரி ஒருவர் மகிழ்ச்சி தெரிவித்தார் சமரச உடன்பாட்டை இந்தியா வரவேற்பதாயும் அவர் கூறினர்.

## ஜெனிவா மகாநாடு பர்மா ஏற்றது

ரங்கூன், பெப். 20

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் 18 நாடுகளைக் கொண்ட படைகுறைப்பு மகாநாட்டில் அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்ற சோவியத் பிரதமர் குருஷ்சேவின் யோசனையை பர்மிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த யோசனையை மேற்கு நாடுகளும் ஏற்று மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் இதுவரை பயனளிக்காத படைகுறைப்பு முயற்சி தலைவர்கள் கலந்துகொள்வதால் பயன்தரக் கூடுமென்றும் பர்மியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர் விடுதலை

போபால், பெப். 21

போபாலில் காவலில் வைக்கப்பட்டிருந்த 300 தொழிலாளர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

## காளிக்கு மகளை பலியிட்ட தந்தை!

### தலையுடன் கோவிலுக்கு செல்கையில் கைது

ஆக்ரா, பெப் 20

ஆக்ராவைச்சேர்ந்த காளி பக்தரான அவஹர்லால் என்ற காய்கறி விற்பனையாளர் தமது 7 வயது புதல்வியின் தலையை வெட்டி காளிதேவிக்குப் பலியிட்டார்!

தலையை வெட்டியதும் அதை ஒரு செப்புத்தகட்டில் வைத்து ரோஜா மலர்களால் அலங்கரித்து அவர் கோவிலுக்குஎடுத்துச்சென்றதாகப் பொலிஸார் கூறுகின்றனர். கோவிலுக்குப் போகும் வழியில் அவர் கைது செய்யப்பட்டார்.

இதற்கு முன்னல், பொலிஸார் அவரது வீட்டைச் சோதனை போட்டுதுண்டிக்கப்பட்ட முண்டத்தையும், ரத்தக்கறை படிந்த துணிகளையும் கைப்பற்றினர்கள்.

கடந்தசில தினங்களாக அவஹர்லால், சித்த சுவாதீனம் இல்லாதவர் போல் நடித்தார் என்றும், பெரும் மனக் கிலேசத்துடன் காணப்பட்டார் என்றும் அயலில் உள்ளவர்கள் கூறுகின்றனர்.

## காங்கிரஸ் ஊழியர் தாக்கப்பட்டனர்

ஆரணி, பெப் 20

ஆரணியில் தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படும் பலர், காலித்தனத்தில் ஈடுபட்டதை யடுத்து நகரில் கி. பி. கோ. 144 பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நகரிலுள்ள எல்லா காங்கிரஸ் கொடிகளையும், பிரசார சாதனங்களையும் அகற்றியதுடன்கூட, காங்கிரஸ் அபேட்சகருக்கு வேலைசெய்த பிரமுகர்களையும் தாக்கினர்கள்.

காங்கிரஸ் அபேட்சகருக்காகப் பயன்படுத்தப்பட்ட கார்களையும் லாரிகளையும் சேதப்படுத்தினர்கள். பல கட்டிடங்களின்மீது ஏறி கொடிகளை அகற்றிக் கொளுத்தினர்கள், சாக்கடையில் எறிந்தார்கள்; பல இடங்களில் பீதியடைந்த மக்கள் கதவைச் சாத்திக் கொண்டு வீட்டோடு அடைந்து கிடந்தனர். கடைகளும், ஓட்டல்களும் மூடிக்கிடந்தன. பஸ்கள் கழிகளாலும், கற்களாலும் தாக்கப்பட்டன. எல்லா பஸ்களும் நகருக்கு வெளியிலேயே நிறுத்தப்பட்டன.

ரிசர்வ் பொலிஸார் வந்த பிறகு நிலைமை அபிவிருத்தியடைந்தது. கி. பி. கோ. 144வது பிரிவின்கீழ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உரிய தருணத்தில் விசேஷப் பொலிஸ் அதிகாரியும், ஜில்லாப் பொலிஸ் சூப்ரிண்டெண்டும் வந்துசேர்ந்தனர். இப்போது நிலைமை கட்டுக்கடங்கியிருக்கிறது. ஆயுத ரிசர்வ் பொலிஸார் தெருக்களில் ரோந்து சுற்றி வருகின்றனர். தடையுத்தரவு 10 தினங்கள் அமுலிலிருந்துவரும்.

மேற்படி சம்பவங்களையொட்டி 3 பேர் கைதுசெய்யப்பட்டனர். தேர்தல் ஏஜெண்டாகவிருந்த ஸ்ரீ சந்திரன் என்பவரை காங்கிரஸ் ஊழியர்கள் கடத்திச்சென்று தாக்கியதாகக் கூறப்பட்டதையடுத்து இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனல் எவ்வித ஆதாரமுமின்றி தி. மு. க. வினர் பரப்பிய வெறும் புரளிதான் இதற்குக் காரணம் என்று காங்கிரஸ ஊழியர்கள் கூறுகின்றனர்.

## உலகத்தின் ரப்பர் தேவையை பூர்த்திசெய்ய இயலவில்லை

### வர்த்தக அமைச்சு அதிகாரி விளக்கம்

கொழும்பு, புதன்

உலகத்தின் ரப்பர் தேவையை இலங்கையினல் பூர்த்தி செய்ய முடியாமலிருக்கிறது.

இலங்கையிலிருந்து ரப்பர் வாங்குவதற்கு அண்மையில், அநேக நாடுகள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்திருந்தன. இதனுடன் இன்னும் பல நாடுகள் இலங்கையுடன் வர்த்தக ஒப்பந்தமும் செய்துள்ளன.

சோவியத் யூனியன், கிழக்கு ஜெர்மனி, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுட்பட பல மத்திய கிழக்கு நாடுகளும் இலங்கையுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துள்ளன.

இது பற்றி வர்த்தக, உணவு அமைச்சின் அதிகாரியொருவர் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "எல்லா நாடுகளின் ரப்பர்த் தேவையையும் இலங்கையினல் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. இலங்கையிலிருந்து பெருமளவு ரப்பரை மக்கள் சீனக்குடியரசு வாங்குகின்றது. ரப்பர் - அரிசி என்ற உடன்படிக்கையின் கீழ் தான் மக்கள் சீனக்குடியரசு எங்களிடமிருந்து ரப்பரை வாங்குகிறது.

கடந்த சில மாதங்களில் ரப்பர் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது."

## பாக். மந்திரியை பேச விடாமல் தடுத்தனர்

லாகூர், பெப. 21

மேற்கு பஞ்சாபில் மாணவர் கூட்டமொன்றில் பாகிஸ்தான் மந்திரி ஜனப் புட்டோவைப் பேச விடாமல் மாணவர்கள் தடுத்தனர். காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தலைவர்களை விடுவிக்குமாறும் அவர்கள் கோஷமிட்டனர். இதன் காரணமாக கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

## இ. போ. ச. வருமானம் 1320 லட்சம்

கொழும்பு, புதன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருமான இலக்கு இவ்வருடம், பதின் மூன்று கோடி இருபது லட்சத்தை அடைந்துள்ளது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கடந்த வருட வருவாயைவிட இது அறுபது லட்சம் அதிகமாகும்.

## கரைச்சி பகுதியில் பஸ்போக்குவரத்து சேவை

### மிகவும் சீர்குலைந்துள்ளது

கிளிநொச்சி, புதன்

கரைச்சிப் பகுதி குடியேற்றத் திட்டப் பிரதேச பஸ் போக்குவரத்துச் சேவை மிகவும் சீர்குலைந்துள்ளது: கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரம் 10 ம் வாய்க்கால் வரையும் செல்லும் பஸ் சேவையை சமீபத்தில் நிறுத்தி வைக்க வேண்டியிருக்கிறதென்றும் குறித்த 5 மைல் நீளமான வீதியைச் சீர்திருத்தி உதவினல் தொடர்ந்து பஸ் சேவையை ஒழுங்காக நடத்தலாமென்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை கரைச்சி கிராமசபைக்கு அறிவித்தது. கரச்சி கிராமசபை குறித்த உருத்திரபுரம்- கிளிநொச்சி வீதி நீர்ப்பாசன இலாகாவினுடைய பொறுப்பிலிருப்பதை உத்தேசித்து அந்த வீதியை நல்ல முறைல் சீர்திருத்தி பொதுமக்கள் பாவிப்புக்கு உதவுமாறு நீர்ப்பாசன இலாகாவுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

உருத்திரபுரம்- கிளிநொச்சி வீதியின் இரு பக்கமும் நீர்ப்பாசன வயல் நிலங்கள் இருப்பதால் தண்ணீர் வரியைக் கொண்டே அவ்வீதியைச் சீர்திருத்தி அமைக்கக் கூடியதாயிருந்தும் சீர்திருத்த எவ்வித முயற்சியும் எடுத்ததாகவும் தெரியவில்லை. இதனல் உருத்திரபுரம், அக்கராயன் முதலிய பகுதி மக்களது பிரயாண வசதி மிகவும் பாதிக்கப்பட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இப்போது நாள்தோறும் 3 பஸ்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து உருத்திரபுரத்துக்கும் 3 பஸ்பள் உருத்திரபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் சேவை செய்கிறது. இந்தச் சேவை இப்பகுதி மக்களுடைய தேவையைப் பூரணப்படுத்த முடியவில்லை.

## இந்திய ஏற்றுமதி குறையாது

### பொது மார்க்கெட் பற்றி யூனியன் மந்திரி

பெங்களூர், பெப். 20

ஐரோப்பாவின் பொது மார்க்கெட் ஏற்பாட்டில் பிரிட்டன் சேர்ந்து கொண்டால், இந்தியாவின் ஏற்றுமதி பாதிக்கப்படும் என்று எண்ணுவது தவறு என்றும், இந்தியாவின் ஏற்றுமதி பாதிக்கப்படமாட்டாதென்றும் யூனியன் மந்திரி திரு. கே. ரெட்டி கூறினர்.

ஆனல் ஐரோப்பாவின் பொது மார்க்கெட்டில் என்ன நிபந்தனைகள்மீது பிரிட்டன் சேருகிறது என்பதையே எல்லாம் பொறுத்திருக்கிறது என்ருர் திரு. ரெட்டி.

சர்வதேச ஐவுளி வர்த்தக ஒப்பந்தத்தை திரு. ரெட்டி வரவேற்ருர். இந்த ஒப்பந்தத்தின் மூலமாக அடுத்த ஐந்தாண்டுகளில் இந்தியாவின் ஐவுளி ஏற்றுமதி பெருகும் என்று எதிர்பார்க்கலாம் என்றும் அவர் கூறினர்.

## மேற்பார்வையாளராக நியமனம்

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பியும், உப தலைவர் திரு. த. விநயகமூர்த்தி ஜே. பி. யும் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைகளின் மேற்பார்வையாளர்களாகச் சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பெற்றுள்ளனர்.

## அரசகரும மொழிபற்றிய கருத்தரங்கம்

### இரண்டாம் முறையாகவும் ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, புதன்

அரசகரும மொழியை நடைமுறைக்குக் கொண்டுவருவது குறித்து நடைபெறவிருந்த அரசாங்க ஊழியரின் கருத்தரங்கம் இம்முறையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கம் இதனுடன் இரண்டாவது தடவையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 31-ந் திகதி இந்தக் கருத்தரங்கம் நடைபெறுவதாக இருந்தது. சில காரணங்களை முன்னிட்டு இக்கருத்தரங்கம் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 24ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, எல்லா நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாகாத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில், அரசாங்கத்தினதும், ஸ்தலஸ்தாபன சேவை இலக்கிய யூனியனதும் சிபார்சின் பேரிலேயே இக்கருத்தரங்கம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

## 'டியூஷனுக்கு கட்டணம் வசூலிக்கக்கூடாது'

கொழும்பு, புதன்

பாடசாலை நேரத்துக்குப் பின்னர் தலைமையாசிரியர் அனுமதியின்றி மாணவர்களுக்கு கொடுக்கப்படும் தனிப்பட்ட 'டியூஷனுக்கு' ஆசிரியர்கள் எவரும் கட்டணம் வசூலிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என தேசிய கல்விக் கமிஷன் சிபார்சு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு பாடசாலையின் வேலை நேரமும் கிழமைக்கு 20 லிருந்து 22 மணித்தியாலம் வரை அதிகரிக் கட்படல்வேண்டும் எனவும் தேசிய கல்விக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

### மணி வாக்கு

'எக்காலமும் அன்பு அளிக்கும் மகிழ்ச்சிக்கும் நட்புறவுக்கும், வெற்றி இணையாகாது.'


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 11 உ (22-2-62)


## புதிய தொழிற்சாலைகள்

புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதார நிலையை வளமாக்குவதுடன், வேலையற்றிருக்கும் ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்குத் தொழில்வசதிகளை அளிப்பதும் சாத்தியமாகும் என்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். இந்தியா சோஷலிஸ அடிப்படையில் நாட்டின் பொருளாதார விருத்திக்கான திட்டங்களை வகுத்து வருகின்றது. புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதில் இந்திய அரசினர் ஈடுபட்டு வருவதுடன் தனியார் துறைகளுக்கும் ஆதரவு காட்டிவருகின்றனர். இதனால் நாட்டின் தேவைகளுக்கேற்ப தொழில்கள் விருத்தியுறுவதற்கு அரசினரின் ஆதரவு தனிப்பட்டவர்களுக்குக் கிடைத்துவருகின்றது.

இலங்கையிலும் சிக்கனமான முறையில் பொருள்களைத் தயாரிப்பதற்கான சிறிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆதரவு அளித்[து வ]ருகின்றது. எனினும் நாட்டின் தேவைகளை இத்தொழிற்சாலைகள் பூர்த்திசெய்வதாயில்லை. புதிய பல தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திடம் இப்போது பலர் விண்ணப்பித்திருக்கின்றனர். இவற்றுட்பல உதிரிப்பொருள்களை வெளிநாட்டிலிருந்து வரவழைத்து அவற்றை இங்கு ஒன்று சேர்க்கும் தொழிற்சாலைகளாக அமைந்தாலும், நாளடைவில் இவற்றின் பல உறுப்புக்களை இலங்கையிலே தயாரிக்கமுடியுமென அவர்கள் தங்கள் விண்ணப்பங்களிற் குறிப்பிட்டிருக்கின்றனர். அத்துடன் அவற்றுக்குத் தேவையான யந்திரங்களையும் அவர்களே வெளிநாடுகளிலிருந்து வரவழைப்பார்கள்.

இந்த விண்ணப்பங்களை அரசினர் இப்போது பரிசீலனை செய்து வருகின்றனர் என அறிகின்றோம். இத்தகைய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்குமுன்னர் தனியார் துறையினர் மேற்கொள்ளவிருக்கும் புதிய தொழிற்சாலைகளைப் பரிசீலனை செய்வதற்கு அத்துறையில் அனுபவம் வாய்ந்த ஒரு சபையை அரசினர் நியமிப்பது விரும்பத்தக்கது. அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளியாது நாட்டின் எந்தப்பகுதியில் குறித்த தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் நல்ல பயனைப் பெறலாம் என்பதை இச்சபையினர் ஆராய்ந்து அறிதல்வேண்டும். இப்படிப் பரவலான ஒரு கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்துக்கொண்டு தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு ஆகவேண்டிய உதவியைச் செய்வதே உகந்ததாகும். நிதி ஒதுக்கும் பொறுப்பை மாத்திரம் சம்பந்தப்பட்ட இலாகா ஏற்றுக்கொண்டு மேற்பார்வை செய்யலாம்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களைத் தயார்செய்யும் தொழிற்சாலைகள் நாட்டின் பலபாகங்களிலும் ஆரம்பிக்கப்படுமானால் அப்பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதுடன் எமது பணத்தின் பெரும்பகுதியை வெளிநாடுகளுக்கு அனுப்பாமலும் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்துடன் முக்கியமான பொருள்களுக்கு என்றுமே வெளிநாடுகளை எதிர்பார்த்து நிற்கவேண்டிய நிலையும் ஏற்படமாட்டாது.

இவ்வாறு தனிப்பட்டவர்களுக்குத் தொழில்துறைகளில் வாய்ப்புக்கள் அளிப்பதால் அவர்களிடம் தேங்கிக்கிடக்கும் பணம் நாட்டிலே செறிவதற்கு நல்ல சந்தர்ப்பங்களையும் அளிப்பதாகும். இவற்றை எல்லாம் தொழில் நுட்ப நிபுணர்களுடன் அரசினர் ஆராய்ந்து புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளிப்பதுடன் மக்களின் ஆர்வத்தையும் ஆக்கவேலைகளில் ஒருமுகப்படுத்துமென எதிர்பார்க்கின்றோம்.

---

இந்தியப் பொதுத் தேர்தல்—4.

# சென்னை நகரில் பலத்தபோட்டி

## காஞ்சிபுரத்தில்காங்கிரஸ் கைஓங்குமா?

—நமது விசேஷ நிருபர்—

சென்னை, பெப். 16

தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னையில் சட்டசபைத் தொகுதிகள் 10; மக்கள் சபைத் தொகுதிகள் 2. சட்டசபைக்கு 43 பேர் போட்டியிடுகின்றனர்; மக்கள் சபைக்கு நிற்கும் அபேட்சகர் 9 பேர்.

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் சபைத் தொகுதிகள் இரண்டுக்கும் 6 பேர் போட்டியிட்டனர், காங்கிரஸ் அபேட்சகர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தென் சென்னையிலும், வட சென்னையில் சோஷலிஸ்ட் எஸ். சி. சி. அந்தோனிப்பிள்ளையும் வெற்றி பெற்றனர். மொத்தம் வாக்களித்த 3·1 லக்ஷம் வாக்குகளில் காங்கிரஸ் நிறுத்திய இரு அபேட்சகர்களும் பெற்ற வாக்குகள் 1·57 லக்ஷம் - 45 சதவிகிதம். தென் சென்னையில் வெற்றிபெற்ற டி. டி. கே. மக்கள் சபையில் மந்திரிப்பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த பின் அரசியலில் இறங்காமலிருந்தார். ஆனல் டி.டி.கே யிடம் அளவற்ற அபிமானமும் நட்பும் கொண்ட காமராஜர் அவரை விடவில்லை. மறுபடியும் தென் சென்னைக்கு அபேட்சகராக நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய வைத்ததுடன் திருச்செந்தூர் தொகுதிக்கு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. திருச்செந்தூரில் அவருக்குப் போட்டியாக நிற்கிறவர்கள் பின்வாங்கவும் டி. டி. கே. போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுவிட்டார். அவருக்குப் பதில் தென் சென்னையில் சி. ஆர். ராமசாமி காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறார். இவர் ஏற்கெனவே சட்டசபைப் பிரதிநிதியாக மைலாப்பூர் தொகுதிக்கு அங்கத்தவர்.

டி. டி. கே. பின்வாங்கிவிட்ட போதிலும் தென் சென்னையில் தேர்தல் சூடு அதிகமாயிருப்பதற்குக் காரணம் தி. மு. க.விலிருந்து பிரிந்து தமிழ் தேசியக் கட்சிக் கொடியின் கீழ் போட்டியிடும் ஈ. வி. கே. சம்பத் நிற்பதுதான். சம்பத் பேச்சுத் திறமைபெற்றவர். மக்கள் சபையில் செல்வாக்கு மிக்கவர். அவருக்கும் ஒரு பெரும் பகுதி அபிமானிகள் உளர். தி. மு. க. வினர் இவரை எதிர்த்துத் தமது பிரதிநிதி நாஞ்சில் மனோகரனை நிறுத்தியுள்ளனர். ஈற்றில் சம்பத் மக்கள் சபைப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் அதில் ஆச்சரியமில்லை.

### வட சென்னையில் யாழ்ப்பாணத்தவர்

வட சென்னையில் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற மக்கள் சபை அங்கத்தவர் எஸ். சி. சி. அந்தோனிப்பிள்ளை. இவர் மறுபடியும் இப்போது போட்டியிடுகிறார். இவர் யாழ்ப்பாணத் தமிழர். கடந்த மகாயுத்தம் ஆரம்பித்த காலத்தில் இலங்கையில் பிரிட்டிஷ் அரசாங்கம் சில தீவிரவாதிகளைச் சிறையில்வைத்தது ஞாபகமிருக்கலாம். என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, பிலிப் குணவர்த்தன முதலியவர்களுடன் அடைபட்டவர் இந்த அந்தோனிப்பிள்ளை. பின்னர் திடீரென்று சிறையிலிருந்து தப்பி இந்த இடதுசாரித் தலைவர்கள் இந்தியாவுக்கு வந்து தலைமறைவாக இருந்து வேலை செய்ததும் பலருக்குத் தெரியும். அந்தோனிப்பிள்ளை சென்னையில் தங்கியிருந்து தொழிலாளர் யூனியன் சேவையில் ஈடுபட்டு, மதிப்பை வளர்த்துக் கொண்டார். மிகப் பெரிய தொழிலாளர் யூனியனின் தலைவராயிருந்து சென்னை சட்டசபையிலும் பின்னர் மக்கள் சபையிலும் அங்கத்தவராகியிருக்கிறார். இவருடைய மனைவி திரு. பிலிப் குணவர்த்தனவின் சகோதரி-சிங்களப்பெண்.

அந்தோனிப்பிள்ளைக்குக் கடந்த பொதுத் தேர்தலில் இருந்த செல்வாக்கு இப்போது இல்லையென்று பேசப்படுகிறது. காரணம் தொழிலாளர்களிடையே இவரைப்பற்றிய அபிப்பிராயம் பிளவுபட்டுப் போய்விட்டது. அன்றியும் கம்யூனிஸ்ட் கட்சியினர் வடசென்னையிலுள்ள சட்டசபைத் தொகுதி வண்ணாரப்பேட்டைக்கு தி. மு. க. வுக்கு எதிராக ஜீவானந்தத்தை நிறுத்தியது. ஏற்கெனவே கம்யூனிஸ்டும் தி. மு. க. வும் வடசென்னையில் சில உடன்பாடுகொண்டபோது, புரசவாக்கத்தில் சோஷலிஸ்ட் பக்கிரிசாமிப் பிள்ளைக்கு எதிராக தி. மு. க. அபேட்சகர் எவரையும் நிறுத்தவில்லை. நகரத்தின் பத்துத் தொகுதிகளில் இந்த ஒரு தொகுதியில்தான் தி. மு. க. அபேட்சகரை நிறுத்தவில்லை. வண்ணாரப்பேட்டையில் கம்யூனிஸ்ட் விட்டுக்கொடுக்கும் என்று நம்பியிருந்தபோது அவர்கள் ஒருவரைப் போட்டியிடச் செய்துவிட்டது வட சென்னையில் தி. மு. க. வுக்கு ஆத்திரத்தையுண்டுபண்ணிவிட்டதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக அந்தோனிப்பிள்ளைக்கு தி. மு. க. ஆதரவு கிடைக்கமாட்டாதாம். காங்கிரஸ் கட்சியின் சார்பில் செல்வாக்குள்ள டாக்டர் ஸ்ரீநிவாஸன் நிற்கிறார். பக்கிங்ஹாம் ஆலைத் தொழிலாளர்களும், ரயில்வேத் தொழிலாளர்களும் அதிகமாக வசிக்கும் வடசென்னையில் எது எப்படியாகும் என்று சொல்வதற்கில்லை. சென்னை நகரத்தின் இரு மக்கள் சபைத் தொகுதிகளையும் காங்கிரஸ் இழக்க நேரிட்டால் அது பெரிய நஷ்டமென்றே சொல்லவேண்டும்.

### காங்கிரஸ் நிச்சயம்

சட்டசபைத் தொகுதிகளைப் பொறுத்தமட்டில் கடந்த பொதுத் தேர்தலில் 10 ஸ்தானங்களில் காங்கிரஸ் 6 ஸ்தானங்களை மாத்திரம் பெற்றது. தி. மு. க. மூன்று ஸ்தானங்களைக் கைப்பற்ற, தொழிற் கட்சி ஒரு ஸ்தானம் பெற்றது. இம்முறை தி. மு. க. 9 ஸ்தானங்களில் போட்டியிடுகின்றது; சுதந்திரா 7. முக்கியமான போட்டி சென்னை நகரத்தில் காங்கிரசுக்கும் தி. மு. க. வுக்கும் என்றுதான் சொல்லவேண்டும். சுதந்திரா அபேட்சகர்கள் நிற்பதால் காங்கிரசுக்கு எதிராயுள்ள வாக்குகள் பங்குபோடப்பட, காங்கிரஸ் நிச்சயமாகப் பெரும்பான்மையான தொகுதிகளைத் தட்டிக்கொண்டு போகக்கூடும். எழும்பூர் தொகுதியில் தி. மு. க. அன்பழகன் போட்டியிடுகிறார். இவரே கடந்ததேர்தலில் இங்குவெற்றி பெற்றவர். கட்சியில் பெரும் செல்வாக்குள்ள இவர் தமிழ் இலக்கியமேடைகளிலும் அதிகமாகத் தோன்றுபவர். ஆனல் எழும்பூர் தொகுதியில் இம்முறை காங்கிரஸ்சார்பில்ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் அபேட்சகராக நிற்பது அன்பழகனின் நிலைமையைக் கடுமையாகப் பாதிக்கலாம். ஜோதி வெங்கடாசலம்ஹிரிஜனமணந்த ஐயங்கார் பெண். பழைய ராஜாஜி மந்திரிசபையில் ஒருமந்திரியாகக் கடமையாற்றியவர். பொது மக்களிடம் நல்ல செல்வாக்குள்ளவர். சென்னையில் வீட்டு வசதி போர்ட்டில் ஒரு அங்கத்தவராயிருந்து பலருக்கு உதவிகளைச்செய்து அபிமானத்தை பெற்றவர். இதனல் கட்சியோ இல்லையோ 'ஜோதியம்மா'வுக்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்று பேசப்படுகிறது.

"தனியரசு" ஆசைத்தம்பி முன்பு பிரதிநிதியாக இருந்த ஆயிரம் விளக்கு தொகுதியில் தி. மு. க. சார்பில் இப்போது மதியழகன் - கழகச் செயலாளர்—நிற்கிறார். இவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் இந்திராணி செங்கல்வராயன் என்ற பெண் போட்டியிடுகிறார். தி.மு.க. இங்குசந்தேகமென்றுபேசப்படுகிறது.

### திருவல்லிக்கேணியில் தி. மு. க.

நகரத் தொகுதிகளில் திருவல்லிக்கேணி தொகுதியில் மாத்திரம் தி. மு. க. வுக்கு அபாரவெற்றி கிட்டும் என்று பேசப்படுகிறது. தி.மு.க அபேட்சகராக நெடுஞ்செழியன்போட்டியிடுகிறார். காங்கிரஸ் இங்கு நிறுத்தியிருக்கும் அபேட்சகர் அவ்வளவாக மக்களுக்குத் தெரிந்தவராயில்லை. பொன் வியாபாரம் செய்யும் சிவநேசனென்ற கோமுட்டிச் செட்டியார். வெற்றியைத் தெரிந்துகொண்ட தி. மு. க. (முஸ்லிம் வோட் முழுவதும் இவர்களுக்கே) காங்கிரஸ அபேட்சகரின் கட்டுப்பணமும் போகவேண்டும் என்று உழைப்பதாகக் கேள்வி. கடந்த தேர்தலில் நெடுஞ்செழியன் நூற்றுக்கணக்கான வாககுகளாலேயேதோற்கடிக்கப்பட்டவர்.

மைலாப்பூர் தொகுதியில்பிரஜாசோஷலிஷ்ட் கட்சியின்சார்பில் செல்வி விஜயலட்சுமிஅபேட்சகராக நிற்கிறார். காங்கிரஸ் சரியான அபேட்சகர் கிடைக்காமல், இறுதி நேரத்தில் வரதப்ப செட்டியாரென்ற மற்றொரு கோமுட்டிச் செட்டியாரைக்கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. தி. மு. க. அரங்கண்ணல் என்ற ஒருவரை நிறுத்தியுள்ளது. சுதந்திரா அபேட்சகரும் நிற்கிறார். விஜயலட்சுமி அரசியற் துறையில் சென்னைப் பல்கலைக்கழக எம்.ஏ.எம் லிட், பி. எச். டி. பட்டம்பெற்ற பெண் சோஷலிஸ்ட் கட்சியில் பலகாலம் சேர்ந்திருக்கிறார். முன்பு சட்டசபைக்கு மைலாப்பூரில் நின்று தோல்வியுற்றவர். சென்னைகார்ப்பரேஷன் தேர்தலிலும் இரண்டு தடவைநின்று தோல்வியுற்றவர். இம்முறை ஒருவேளை வெற்றி பெறலாம்.

சென்னை நகரத்தில் காங்கிரஸ கடந்த தேர்தலில் 6ஸ்தானங்களைப் பெற்றது. இம்முறை இந்த 6 தான் பெறக்கூடும்.

### கடும் எதிர்ப்பு

தென் ஆற்காடு மாவட்டத்தில் காங்கிரசுக்கு கடும் எதிர்ப்பு இருக்கிறதாகப் பேசப்படுகிறது. சுதந்திராக் கட்சி பல அபேட்சகர்களை நிறுத்தியிருப்பதும், வன்னிகுல மக்கள் காங்கிரசுக்கு மாறுயிருப்பதும் இங்கு காங்கிரஸ் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றத் தடையாயிருக்கலாம்.

சேலம் மாவட்டத்தில்தான் தி. மு. க. செக்வாக்கு அதிக

(5-ம் பக்கம் பார்க்க)

---

## ஐயாறன்

எழுதுவது

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஜிந்துப்பிட்டி (ஜயந்தி நகர்) முருகன் கோவிலுக்குச் சென்றிருந்தேன். கோவில் புதுப்பொலிவுடனே காட்சி அளிக்கிறது.

முன்பக்கத்தில் திருஞானசம்பந்தர் கானசபை, சலவைக்கற்கள் பதித்து அழகான புது மண்டபம் கட்டியுள்ளனர். விமானத்திலே விநாயகர் திருவுருவம். "... வழிபடும் அவர் இடர் கடி கணபதிவர அருளினன்..." என்று பொற்தாளம் போட்டுக்கொண்டு, சிவப்பொலிவுடனே அழகு சொட்டப் பாடுகிறார் குழந்தை ஞானசம்பந்தர்..

இந்தச் சபை எப்போது, எப்படி ஏற்பட்டதென்று விசாரித்தேன். சில வருடங்களுக்கு முன்பாக, கடைச்சிப்பந்திகள் சிலர் சேர்ந்து, ஒரு கிட்டங்கியிலே பஜனை செய்தனராம். பின்னர் அது ஜயந்திநகர் கோவிலுக்கு வந்து, புத்துயிர்பெற்று வளர்ந்துவந்துள்ளது.

இப்போது அங்கு கோவில் கொண்டுள்ள நடராஜப் பெருமானுக்கு மண்டலாபிஷேகம். பக்தியுடன் பலரும் சேர்ந்து, தேவார திருவாசகங்களைச் செவிக்கினியமுறையில் பாடினர். கோவில் குருக்கள் வந்து, அர்ச்சனை, வழிபாடுகள் நடத்தினர். வெற்பொழித்த புகலியர்கோன் பாதமலர்தனைக் கொண்டு, பல அன்பர்கள் திருத்தொண்டு பரவுவதைக் கண்டேன்.

* * *

கோவிலுக்குள்ளே லட்சார்ச்சனை தொடர்ந்து நடக்கின்றது. மூலஸ்தானருக்கு கண்ணைக்கவரும் முறையிலே அலங்காரம் செய்திருந்தனர். எட்டுக்கிரகங்களும் கூடிக் கலந்துவிட்டாலும், லட்சார்ச்சனை அர்ச்சனைகள் விடாமல் நடந்துவருகின்றன. கணக்கு பல லட்சங்களைக் கடந்துவிட்டனவாம்!

அப்பால் கூட்டுப் பிரார்த்தனை. முதலாளி—தொழிலாளி என்ற வேற்றுமைகளின்றி பலரும் இதில் கலந்துகொள்ளுகின்றனர். பிரிந்தவரனைவரையும் மீண்டும் கூடும்படி செய்துவிட்டான் முருகன்.

மகாத்மாகாந்தி உயிர்த்தியாகம்செய்த மறுவாரம்முதற்கொண்டு இக் கோவிலில் கூட்டுப்பிரார்த்தனை தொடர்ந்து 13 வருடங்களுக்குமேல் நடந்துவருவது குறிப்பிடத்தக்கது. வள்ளி தெய்வானையுடனே முருகன் நேரில் வந்திருந்து, காட்சி கொடுத்து, இக் கூட்டுப்பிரார்த்தனையை நடத்திவைக்கின்றார்.

அன்று ஒரு சிப்பந்தி விவேகானந்தரைப்பற்றிப் பேசினர். முதலாளி ஒருவர் இச் சிப்பந்தியைப் பாராட்டிப்பேசி நன்றி தெரிவித்தார். முதலாளி-தொழிலாளி இவர்களை ஒன்றுகூட்டுகின்றான் கலியுகவரதனை முருகன்! நம்மிடையேயுள்ள பலபல வேற்றுமைகளும் நீங்கி நம்மையெல்லாம் ஒன்றுபடுத்தும் சக்தி கருணைக்கடலான கடவுளுக்கே உண்டென்பதை நேரில் கண்டேன்.

இக் கோவிலின் புகழ் எங்கும்பரவி வரவர வளர்ச்சியடைந்து பலருக்கு முன்மாதிரியாக இருக்கக் காரணம், இங்கு மதுரை சந்நிதானம், மகாத்மா காட்டிய வழியைப் பின்பற்றி, ஆரம்பித்து நடத்திவைத்த கூட்டுப் பிரார்த்தனைதான். இதை விடாமல் தொடர்ந்து நடாத்திவருவது பாராட்டத்தக்கது.

* * *

சமீபத்தில் இந்தியா சென்றிருக்கையில் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கும் சென்றிருந்தேன். ஒவ்வொருநாளும் அங்கு ஒரு விசேஷம். கூட்டுப் பிரார்த்தனை, சமயவகுப்பு, ஆலயத்தில் ஆடிவீதியைச்சுற்றி தேவார பஜனை

(7-ம் பக்கம் பார்க்க)

# 20,000 ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சும் வசதி

## இரணைமடு குளத்தில் இருக்கிறது

கிளிநொச்சி, புதன்

1962-ம் ஆண்டு சிறுபோக நெற் செய்கைக்கு இரணைமடுக் குளத்தில் சமார் 20,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சக் கூடியதாக தண்ணீர் இருக்கிறது. தண்ணீர் பங்கீட்டுக் கூட்டம் அடுத்தமாதம் நடைபெறும். இருந்தாலும் விவசாயிகளுக்கு அரைவாசி நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அக்கராயன் குளத் திட்டத்தில் முழுநிலத்துக்குமே நீர்ப்பாய்ச்சக்கூடியதாக குளம் நிறைய நீர் இருப்பதால் அக்கராயன்குள திட்டத்தின்கீழ் சிறுபோக நெல் விளைவுக்கும் நல்ல வசதிஏற்பட்டிருக்கிறது.

கரைச்சி, துணுக்காய் காரியாதிகாரியின் பிரிவின் கீழ் இந்தக் காலபோகத்தில் சுமார் 40,000 ஏக்கர் நெல் விதைக்கப்பட்டுள்ளது. சுமார் 8 லட்சம் புசல் நெல் விளைவு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நெல்லை அரசாங்க உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யக்கூடிய எற்பாடுகளை இப்பகுதியில் உள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் கவனித்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. காலபோக அறுவடை ஆரம்பித்துவிட்டது யாழ்ப்பாணப் பகுதி, மட்டக்களப்புப்பகுதித் தொழிலாளர்கள் அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.

# மாடு, கோழி, வாழைக்குலை திருடர்கள் அதிகரிப்பு

## கரைச்சி குடியேற்ற பகுதியில் மக்கள் தொல்லை

கிளிநொச்சி, புதன்

கரைச்சி குடியேற்றப் பகுதிகுளில் திருடர்களின் அட்டகாசம் சென்ற ஒரு வாரமாக அதிகரித்துவிட்டது. இரவில் வீடுகளிலும் தோட்டங்களிலும் வாழைக்குலை, காய்கறி, ஆடு மாடுகள், கோழிகள் முதலியவற்றை திருடர்கள் களவாடியசம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெற்றிருப்பதால், இப்பகுதியில் உள்ள மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள். சென்ற மாதம காந்திசேவாசங்க நெசவு சாலையில் திருடர்கள் புகுந்து சுமார் 900 ரூபா பெறுமதியான சொத்துக்களை திருடிச் சென்றனர்.

சென்ற ஒரு வாரத்துக்கிடையில் பல திருட்டுச் சம்பவங்கள் நடந்ததை அறிந்த கரைச்சி கிராம சபைத் தலைவர் அன்டன் வி. பொன்னம்பலம் கிராம முன்னேற்றச் சங்கங்கள் தொண்டர் படை அமைத்து சுயமுயற்சியாக இராக் காலங்களில் கண்காணித்தாலொழிய சில்லறைத் திருட்டுக்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் கஷ்டம் எனவும் இத்துறையில் சமூக நலனில் அக்கறை உள்ளவர்கள் முயற்சி எடுக்கவேண்டும் எனவும் அபிப்பிராயம் தெரிவித்தார். பல திருட்டுச் சம்பவங்களை முன்னிட்டு கிளிநொச்சிப் பொலிசார் இரவு பாதுகாப்பு சேவையில் அக்கறை எடுத்திருந்தும் திருட்டுகள்குறையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### கிரிக்கெட்

## மேற்கிந்திய கோஷ்டியின் மகத்தான வெற்றி

போர்ட் ஆப் ஸ்பெயின் பெப். 21

மேற்கிந்திய தீவுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியக்கோஷ்டி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா, முதல் இன்னிங்ஸில் 203 ரன்களும், 2-ம் இன்னிங்ஸில் 98 ரன்களும் எடுத்தது. மேற்கிந்திய கோஷ்டி, முதல் இன்னிங்ஸில் 289 ரன்களும், 2-ம் இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 15 ரன்களும் எடுத்தது.

## குருஷ் சேவுக்கு நேரு பதில் அனுப்பினர்

புதுடில்லி, பெப். 21

ஜெனிவாவில் 18 நாடுகளின் உச்சி மகாநாடு நடைபெற வேண்டுமென்ற குருஷ்சேவின் கடிதத்திற்கு பிரதமர் நேருவின் பதில் அனுப்பப்பட்டுவிட்டது. மாஸ்கோவிலுள்ள இந்தியத்தூதர் ரஷ்ய அரசாங்கத்திடம் இப்பதிலைச்சேர்ப்பிப்பார். புதுடில்லியிலுள்ள ரஷ்யஸ்தானிரிடமும் இப்பதிலின் நகல் கொடுக்கப்பட்டது.

# கப்பலிலிருந்து கடிகாரங்களை கடத்த முயன்றார்

## அதிகாரிக்கு ரூ 750 அபராதம்

கொழும்பு, புதன்

தற்பொழுது துறைமுகத்தில் தங்கியிருக்கும், எஸ்எஸ் 'ஸ்ராட்குக்' கப்பலின் நான்காவது அதிகாரி திரு. வண்டர் ரேஸ்ட்டுக்கு கோட்டை மாஜிஸ்டிரேட் திரு. சிறிமிவன் அமரசிங்கா ரூ. 750 அபராதம் விதித்தார்.

15,000 ரூபாய் பெறுமானமுள்ள 91 கைக்கடிகாரங்களை கப்பலில் இருந்து வெளியில் கள்ளத்தனமாக கொண்டுவர முயற்சித்ததாக இவர்மீது குற்றம்சாட்டி வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. குற்றத்தை அவர் ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்டிரேட் அவருக்கு ரூ 750 அபராதம் விதித்தார்.

கைக்கடிகாரங்கள் யாவும் திரு. ரேஸ்ட்டின் இடுப்புப் 'பெல்ட்'டில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

## "20 நாட்களாக அம்மை நோய் இல்லை"

### —சுகாதார இலாகா

கொழும்பு, புதன்

சுகாதாரசேவை இலாகா வெளியிட்ட ஒரு சுற்றறிக்கையில் கடந்த இருபது நாட்களில் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பெரியம்மை காணப்படவில்லை என குறிப்பிட்டுள்ளது.

கடந்த இருபது நாட்களில் எங்கும் பெரியம்மை காணப்படவில்லையென்றும், பெரியம்மையினால் இனிமேல் எவரும் பிடிக்கப்படமாட்டார்கள் என நம்புவதாகவும் அந்த சுற்றறிக்கை மேலும் கூறுகிறது.

## 'சிங்ககிரிக் காவலன்' நாடக அரங்கேற்றம்

### தமிழ் நூல்கள் வெளியீட்டுக்கு நிதி

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைக் கலைக்கழக நாடகப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற திரு. சொக்கன் எழுதிய 'சிங்ககிரிக்காவலன்' நாடக அரங்கேற்றம் அடுத்த மாதம் 9-ம், 10-ம் திகதிகளில் யாழ்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் தமிழ்ப்புத்தக வெளியீட்டுகழகத்தினால் நடாத்தப்பட இருக்கும் இந் நாடகத்தினால் சேரும் பணம் சிறந்த தமிழ்ப்புத்தக வெளியீட்டுக்காகப் பயன்படுத்தப்படும்.

## ஆங்கில ஆசிரியர் சங்கக் கிளை

மட்டக்களப்பு, புதன்

அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்க மட்டக்களப்புக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மட்டக்களப்பு செண். மைக்கல் கல்லூரி மண்டபத்தில் திரு. விக்டர் ரி. ஞானசூரியம் தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி ஆர். எட்வேட். உபதலைவர்கள்: வண. பிதா ஜே. மிலர், திரு. வி. ரி. ஞானசூரியம் (அதிபர், மத்திய கல்லூரி), திரு. கே. கணபதிப்பிள்ளை (அதிபர், சிவானந்த வித்தியாலயம்). செயலாளர்: திரு. எஸ். நவரத்தினராசா. உப செயலாளர்: திரு. வி. இராஜதுரை. பொருளாளர்: திரு. எப். ஆர். ரூகல்.

# பெண்ணின் முகத்தைகடித்து பணத்தை பறித்துச்சென்றார்

கம்பஹா, புதன்

இனம் தெரியாத ஒருவர் வீடொன்றுக்குள் நுழைந்து, அங்கிருந்த ஒரு பெண்ணின் முகத்தில் கடித்துவிட்டு அவரிடமிருந்து ரூ 2,750 பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்.

ஜனவரி மாதம் 10-ந் திகதி சூரிகம என்ற இடத்தைச் சேர்ந்த ஜி. சோமாவதி என்பவரிடமிருந்து ரூ. 2,750 பறித்துக்கொண்டு ஓடியதாக கொனகென என்ற இடத்தைச் சேர்ந்த எச். ஏ. அல்பேனிஸ் பெரேரா என்பவர் மீது குற்றம் சாட்டி இவ் வழக்கு கம்பஹா மாஜிஸ்டிரேட் திரு எஸ். எஸ். குலதிலகா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் போது, சோமாவதி பின்வருமாறு தெரிவித்தார்:-

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு 7-30 மணிக்கு பெரேரா என் வீட்டுக்கு வந்தார். அவருக்குக் கொடுக்கக் கூடியபணத்தை நான்கொடுக்கவில்லையென்று கூறி, கெட்ட வார்த்தைகளால் என்னை ஏசினார். பணத்தை ஏமாற்றி வைத்திருப்பது எனது எண்ணம் இல்லையென்றும் பணத்தைத் தருவதாகவும் நான் கூறினேன்.

நான் பணத்தை எண்ணிக்கொண்டிருந்த சமயம், பேரேரா எனது பணத்தைப் பறித்தார். நான் அதைத் தடுத்த சமயம் எனது முகத்தில் கடித்துவிட்டு பணத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். நான் அவரைத் துரத்திச் சென்றும் பயனில்லாமல் போய்விட்டது."

தான் சுற்றவாளி எனப் பெரேராகூறவே, விசாரணை நிறுத்திவைக்கப்பட்டது.

# அ. இ. தமிழாசிரியர் 15 வது மகாநாடு

## புதிய நிர்வாகிகள் தேர்தலில் பலத்த போட்டி?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் இருபத்தினன்காம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க 15வது மகாநாட்டில் நடப்புவருட நிர்வாகிகள் தேர்வுகள் நடைபெறவிருக்கின்றன. சங்கத்தின் பலதரப்பட்டமுக்கிய பதவிகளுக்குபலர் போட்டியிட முன்வந்ததுடன் முன்கூட்டியே சில சங்கங்களும் தம் ஆதரவையும் நல்க முன்வந்துள்ளன.

தலைவர் பதவிக்கு திரு. கு. வி. செல்வத்துரை (பதவியிலிருப்பவர்) யும் திரு. த. ச. சண்முகநாதனும் போட்டிபோடுகின்றனர். பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. ம. சிவநேசராசா (பதவியிலிருப்பவர்) வும் திரு. டொ. சை. க. வணசிங்கமும் போட்டியிடுகின்றனர். பொருளாளர் பதவிக்கு திரு. வ. நடராசா (பதவியிலிருப்பவர்) வும் திரு. ம. சிவநேசராசாவும் நிற்கிறார்கள்.

உபதலைவர் பதவிக்கு 13பேர் போட்டியிடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவுக்கு பாராட்டு

வாஷிங்டன், பெப். 21

அமெரிக்கா மேற் கொண்ட வெற்றிகரமான வானவெளிப் பிரயாணத்தை முன்னிட்டு ஜனாதிபதி கென்னடி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். மேற்குஜெர்மன் அதிபர் டாக்டர் அடினோர் அமெரிக்க வெற்றி குறித்து அனுப்பியுள்ள பராட்டுத் தந்தியில் "மனித வரலாற்றில் இது முக்கிய சம்பவம்" என வர்ணித்திருக்கிறார். ஐ. நா. தலைமைக் காரியதரிசி திரு. யுதாண்டும் பாராட்டுச்செய்தி அனுப்பினார் உலக சபைபிரதிநிகள் வானவெளிப்பிரயாணத்தை டெலிவிஷனில் அவதானித்துக் கொண்டிருந்ததால் ஐ. நா. சபைக்கூட்டம் 45 நிமிஷம்தாமதித்து நடந்தது.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கள், எல்லாம் நடக்கின்றன ஞாயிற்றுக்கிழமைகளில், வேறு யதங்களிலிருந்து மீண்டும் தாங்களாக சைவசமயத்துக்குத் திரும்ப விரும்புபவருககு சங்கிதானம் சிவ தீட்சையும் புதுப் பெயரும் கொடுக்கின்றார். இதுவரை இரண்டாயிரம் பேருக்குமேல் இந்துசமயத்தில் திரும்பச் சேர்ந்துள்ளதாகக் கேள்விப்பட்டேன்.

## இந்தியப் பொதுத் தேர்தல்—4.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மூண்டு. கைத்தறி நெசவாளர் கிராமங்களிலெல்லாம் திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் மதிப்புப் பெற்றுள்ளன ஆகையால் தி. மு. க இங்கு இரண்டொரு ஸ்தானங்களை காங்கிரஸிலிருந்து மீட்டுக்கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கிடைக்கும் செய்திகளில் தமிழ் நாட்டு மந்திரி லூர்தம்மாள் சைமன் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கிறதெனத் தெரிகிறது. உவரிலே ஒரே வகுப்பில் இரண்டு பிரிவு. அன்றியும் காங்கிரஸ் வேறு ஒரு பிரதிநிதியை அபேட்சகராக நிறுத்தியிருக்க வேண்டுமென்று அந்தப் பகுதி காங்கிரஸ் வட்டாரங்கள் கருதுகின்றன. கன்னியாகுமரி மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்ததற்கு முழுமாருக அபேட்சகர் நிறுத்தப்பட்டது. அவர்களுக்கு கசப்பையுண்டுபண்ணிவிட்டது. இதன் பேருக, காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கட்சியிலிருந்து விலகி சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார். நாகர் கோவிலிலும் காங்கிரஸ் செல்வாக்கில்லையென்று பேசப்படுகிறது.

### காஞ்சிபுரத்தில் போராட்டம்

சென்னைக்கு அருகிலுள்ள காஞ்சிபுரத்தில் தி. மு. க.வின் கோட்டையைத் தகர்த்தால் அந்தக் கட்சியின் செல்வாக்கையே நசுக்கிவிடலாம் என்று காங்கிரஸ் நம்புவதால் அந்த தொகுதியின் நிரந்தரவாசியான தி. மு. க. தலைவர் அண்ணாத்துரைக்கு எதிராக நடேசமுதலியார் என்பவரை நிறுத்தியிருக்கிறார்கள். முந்திய தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று தோல்வியுற்றவர் டாக்டர் ஸ்ரீநிவாசன்என்ற பிராமணர். இம்முறை அண்ணாத்துரையின் சாதியைச் சேர்ந்த ஒருவரையே காங்கிரஸ் தெரிந்தெடுத்து நிறுத்தியதால் காஞ்சீபுரம் நெசவாளர்கள் இரண்டுபட்டுவிட்டனர் என்று பேசிக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் மிகப்பெரிய தேர்தல் போராட்டம் காஞ்சீபுரத்தில்தான்.

காஞ்சீபுரத்தை அடக்கியுள்ள செங்கல்பட்டு மக்கள் சபைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி அபேட்சகராக ஓ. வி. அழகேசன் நிறுத்தப்பட்டிருக்கிறார். பழைய ரயில்வே மந்திரி. ஆனால் சென்ற பொதுத்தேர்தலில் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி (சுயேச்சை) யிடம் தோல்வியுற்றவர். டாக்டர் கிருஷ்ணசாமி ஆர்க்காடு ராமசுவாமி முதலியாரின் புதல்வர். ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைக் கமிட்டியின் தலைவராயிருந்தவர். சிறந்த சட்டநிபுணர். மக்கள்சபையில் செல்வாக்குள்ளவர். காங்கிரசுக்கு எதிராயுள்ள அநேக கட்சிகளும் இவரை ஆதரிக்கின்றன. ஓ. வி. அழகேசன் தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர். சென்னை மந்திரி பக்தவத்சலத்தின் சகலப்பாடி இவரும் முதலியார் இனத்தைச் சேர்ந்தவரே இந்தப்போட்டியில் டாக்டர் கிருஷ்ணசாமி வெற்றிபெறுவார் என்பதில் பலர் சந்தேகப்படவில்லை. காங்கிரசுக்கு மக்கள் சபைத்தொகுதியில் இந்த வட்டாரத்தில் அவ்வளவு சாதகமில்லாவிட்டாலும் காஞ்சீபுரத்தில் சட்டசபைப் போட்டி பயனளிக்கலாம்.

# மங்கையர் உலகம்



# மாதர்குல மாணிக்கம்

## காவியக் கண்ணகி

நீண்ட பலவாண்டுகளாகப் பொலிவுற்று விளங்கி ஆடி நன்நிழலில் நீடிருங்குன்றத்தைக் காட்டுவார் போன்று கருத்து வெளிப்படுத்து நிலவும் சீரிய நூலாம் சிலப்பதிகாரத்துள்ளே பழந் தமிழர் பண்பு சான்ற வாழ்க்கை திறம்பட வரைந்து காட்டப்பட்டுள்ளது.

காப்பியத் தலைவி கண்ணகி பண்டைத் தமிழ் மகளிர் பண்பு நிறை வாழ்க்கையை நிலைநின்று நினைவுறத்த நம்மவர்க்கு சேர முனியால் வழங்கப்பட்ட பெருங் கொடையாம்.

கண்ணகியிடத்து இல்லாளுக்குரிய நல்லழகு பலவும் நிறைந்து நிலவக் காண்கிறோம். சீதா பிராட்டியிடத்து

"இற்பிறப்பென்பதொன்றும்
இரும்பொறையென்பதொன்றும்
கற்பெனு பெயரதொன்றும்
களி நடம் புரிய"க் காணும்

யாம் கண்ணகியிடத்து இவற்றுடன் மனத்திண்மையையும் மாறுபட்டோரை ஒறுக்கும் திறமையையும் காண்கின்றோம்.

### மாபெரும் பத்தினி

மணிமேகலையெனும் கணிகையின் துறவு பாடிய சாத்தனாரும் "மாபெரும் பத்[illegible]" என நனி புகழ்ந்தேத்துகின்றார்.

கோவலன் மாதவி பால் மயங்கி கண்ணகியை மறந்துறைந்த காலத்து கண்ணகி கொழுநரொடு வாழும் மகளிர்க்குரியனவாகிய மேகலையணிதல், காதில் குழையணி மேதகப் பூணல், கண்களில் அஞ்சனம் கவினத் தீட்டுதல், நெற்றியிற் பொட்டினையிட்டு மகிழ்தல், கூந்தலில் நெய்யணிக் குழம்பு பூசல் ஆயவற்றை மறந்தாள்; அல்லும் பகலும் அயலாரறியாது கண்ணீருகுத்தினாள்.

"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்மென" எஞ்சியிருந்த இரு சிலம்புகளையும் அவனிடம் கொடுத்தாள். சிலம்பினைப் பெற்றவன் அவற்றின் முதலாகக்கொண்டு மதுரையெய்தி வாணிகஞ் செய்து இழந்த பொருளை ஈட்டத் துணிந்து கண்ணகியையுமுடன் செல்லுமாறு பணிப்ப அவளும் மகிழ்வுடன் உடன் சென்றாள். "கடுங்கதிர் வெம்மையிற் காதலன்றனக்கு நடுங்குதுயரெய்தி நாப்புளர வாடித் தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி" கண்ணகி தன் கொழுநனுடனும் கவுந்தியடிகளுடனும் ஐயக் கோட்டத்தின் ஒரு புடை இளப்பாறியிருந்தபோது சாலினி தெய்வமுற்றுக் கண்ணகியை நோக்கி,

"பேதுறமொழிதனள் மூதறிவாட்டி" என்று புது முறுவலுடன் கணவன் பக்கலொதுங்கி நின்றாள்.

இத்துணை அடக்கமும் பொறுமையும் நிறைந்த கண்ணகி கணவன் கொலையுண்ட செய்தி கேட்டாள். பொங்கி எழுந்தாள். வன்மையின் வடிவம் கொண்டாள். கற்பெனுந் திண்மை அவ்வடிவத்துக் களி நடம் புரிந்தது.

காய் கதிர்ச் செல்வனை நோக்கித் தன் கணவன் கள்வனோ என வினவினாள். கள்வனல்லன் என்ற விடை கிடைத்தது. 'மெய்யிற்' பொடியார் பிரித்த கருங்குழலும் கையில் தனிச் சிலம்பும் கண்ணீருமாய் வையைக் கோன் கோயில் வந்தாள். தன் கணவனை அவன் ஆராயாது கொன்ற கொடுங்கோன்மையை அஞ்சாதிடித்துரையால் எடுத்துரைத்தாள். தன் காற் சிலம்பு கொண்டு தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைநிறுத்தினாள். இறைமுறை பிழைத்த மன்னன் மயங்கி வீழ்ந்தான். வீழ்ந்தவன் எழுந்தானல்லன்.

### மாதர் குல மாணிக்கம்

ஆறெணுந் துயரத்து மனவிலாச் சினத்திலும் அறவழி பிறழ்ந்தாளல்லள் கண்ணகி. மதுரையை எரியூட்டியபொழுது "பார்ப்பாரறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவியெனுமிவரை" விடுத்துத் தீத்திறத்தார் பக்கமே சேரும்படி அங்கியங் கடவுளைப் பணித்தாள். இம்மாதர் குல மாணிக்கமே காவியக் கண்ணகி.

கடிதம்-8.

# அன்புள்ள மாலதிக்கு,

உனது கடிதம் கிடைத்தது. உலக மேடையொன்றை அமைத்து, அதில், உலகத்தில் உன்னத வாழ்க்கையை மேற்கொண்டிருந்த உத்தம இரத்தினங்கள் பலரை ஏற்றி, உனது லட்சியக் கனவுகளை அள்ளிச் சொரிந்திருக்கிறாய். இவர்களைப் பற்றியெல்லாம் நீ தெரிந்து கொண்டிருக்கிறாய் என்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். உலகமேதைகள், பெரியார்கள் வரலாறுகளைப் பெண்கள்தாம் பெரிதும் தெரிந்திருக்கவேண்டியவர்கள் என்பதை நீ இப்பொழுது உணர்ந்திருக்கிறாய் அல்லவா?

உயர்ந்த லட்சியங்களையும், தூய எண்ணங்களையும், குழந்தைகள் உள்ளத்தில் பதியவைக்கச் சிறந்த வழியென்ன என்பதை நாம் தெரிந்திருத்தல் அவசியம்.

உலகத்திலுள்ள பலரும்பெரியார்கள் வரலாறுகளைப் படிக்கிறார்கள்; போதிக்கிறார்கள். சிலர் இப்படிப்பட்ட சான்றோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கும்போது மட்டும் நல்ல மனம் உடையவர்களாக இருக்கிறார்கள். சிலர் காவியங்களைப் படிக்கும்போது மட்டும் இளகிய நெஞ்சம் உடையவர்களாய், உணர்ந்து உருகிக் கண்ணீரும் விடுகிறார்கள். சிலர் பிறர்க்கு அறத்தின் பெருமையை எடுத்துரைக்கும்போது மட்டும் நல்லவர்களாக இருக்கிறார்கள். சிலர் கடவுளும் தாமுமாக பூசையறையிலும் கோவில்களிலும் இருக்கும்போது மட்டும் நல்லவர்களாய் விளங்குகிறார்கள். சிலர் சுநாட்டில் மட்டும் நல்லமனம்பெற்று உண்மைகளை உணர்ந்து உருகவில்லையா!

உலகப் படைப்பை மட்டும் அறிதலும், உலகப் பெரியார் வரலாறுகளை மட்டும் படித்தலும், காவியங்களைமட்டும் கற்றலும், கடவுளைமட்டும் பூசித்தலும் இருந்துவிட்டால் மாத்திரம் வாழ்வில் லட்சியம் நிறைவேறிவிடாது. அவற்றை வாழ்க்கை லட்சியங்களாகக் கொண்டு நெறிபிறழாமல் வாழ்ந்துகாட்டுதல் தான் இவற்றைப் படிப்பதால் ஏற்படும் பயன் என்பதை மறந்துவிடாதே. மனிதகுல மாணிக்கங்கள் என்று உலகத்தோரால் போற்

(7-ம் பக்கம் பார்க்க)

# காய்கறிகளை அழுகாமல் காப்பாற்றுவது எப்படி?

— 'ஸ்ரீ தேவி' —

நமது வீட்டில், காய்கறிகளை அழுகாமல் காப்பாற்றிவைப்பதற்கு குளிர்சாதனப்பெட்டி இல்லை. இந்த வகையில் காய்கறிகளை நாம் எவ்விதம் அழுகாமல் காப்பாற்றி வைக்கமுடியும் என்பதை அறிந்திருப்பது அவசியமாகின்றதல்லவா? நமது நாட்டில் காய்கறிகள் தினமும் கிடைப்பதில்லை. இன்று ஒருருத்தல் கோவாவை நாற்பது சதத்துக்கு வாங்கினோமானால் ஓரிரண்டு நாளில் கோவா ஒரு ருத்தலின் விலை எழுபது சதமாகிவிடுவதுடன், சில சமயத்தில் கிடைப்பதும் அரிதல்லவா?

ஒவ்வொரு காய்கறிகளும் ஒவ்வொரு காலத்தில்தான் கிடைக்கும். அந்தக்காலத்தில் அவை, விலையில் மலிவாவதுடன், உபயோகப்படாமலும், அழிந்தும் போவதுண்டு. அந்தந்தக் காய்கறிகள், அவ்வவற்றின் உரிய பருவத்தைக் கடந்தபின், அவற்றை சமைக்க விரும்பினால் அவை கிடைக்க மாட்டா. மாம்பழங்கள் முதலியவை, அவை கிடைக்காத நாட்டுக்கு, அழுகாமல் காப்பாற்றும் முறையை அனுசரித்துச் சமீப காலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் தோட்டப்பயிர் செய்பவர்களுக்கு நல்ல ஊதியமும் கிடைக்கிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

# பழச்சாறும் ஜாமும் தயாரித்தல்

நமது நாட்டில் விசேஷமாகக் கிடைக்கும் மாம்பழம், அன்னாசிப்பழம், தோடம்பழம், எலுமிச்சம்பழம், நாகப்பழம், தக்காளிப்பழம் முதலியவைகளில் ரசம் அதிகமாகயிருக்கிறது. இந்தப்பழங்கள் விசேஷமாகக் கிடைக்கும் பருவகாலங்களில் அவைகளைச் சேகரித்து அவற்றினின்றும் ரசத்தைப் பிழிந்தெடுத்துக் காய்ச்சி, சர்க்கரை சேர்த்தும் சேர்க்காமலும், இந்தப் பழச்சாறுகளைத் தயார் பண்ணலாம். அதிகநாள் இந்தச் சாறுகள் கெடாமலிருக்க, சோடியம் பென்சொயிட் என்னும் மருந்தையும் ஆபிரத்

(7-ம் பக்கம் பார்க்க)


மாமைட் பலமும் சுகமும் தருகிறதால் நானும் என் கணவரும், என்பிள்ளைகளும் மாமைட் அருந்துகிறோம் — இதைக் கவனிப்பது என் கடமையாகும்.



இவர்கள் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறார்கள். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப் படலாம். உங்களுக்கு விருப்பமானால் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும்போழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.




மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்

மாமைட்

காங்கேசன்துறையில்

# ஐக்கிய விளையாட்டுக்கழகம் அங்குரார்ப்பணம்

## இலங்கை உதைபந்தாட்ட சங்கத்துடன் இணைக்க முடிவு

யாழ்ப்பாணம், புதன்

வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள பிரபல விளையாட்டுக் கழகங்களான காங்கேசன்துறை றோயல் விளையாட்டுக் கழகம், நடேஸ்வரன்ஸ் விளையாட்டுக் கழகம், தையிட்டி ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம், மயிலிட்டி விளையாட்டுக் கழகம் ஆகியன ஒன்று சேர்ந்து ஓர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை அமைத்துள்ளன. காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் என அழைக்கப்படும் இப்புதிய கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் உதை பந்தாட்ட மத்தியஸ்தரும், உடற்பயிற்சிப் போதனாசிரியருமான திரு. வி. சண்முகராசா தலைமையில் நடைபெற்றது.

இப்புதிய கழகத்திற்கு நிதி சேர்ப்பதற்காக ஓர் சிறந்த உதைபந்தாட்டக் கோஷ்டியை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வரவழைத்து ஓர் உதைபந்தாட்டப் போட்டியை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

கழகத்திற்குரிய புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ஏ. எஸ் மரியநாயகம் (பொலிஸ் உதவி அத்தியட்சகர்).

உப போஷகர்: திருவாளர்கள் சு. கிருபாமூர்த்தி, ஏ. வி. சதாசிவம், எஸ். சிவனடியார். ஏ. சங்கரப்பிள்ளை, டாக்டர். எஸ். வி. சீனிவாசகம் (பட்டின சபைத் தலைவர்).

தலைவர்: திரு வி. சண்முகராசா.

உப தலைவர்கள்: திருவாளர்கள் வி. இரத்தினசிங்கம், என். வேலாயுதம், ஜி. ராஜரத்தினம், பி. சற்குணநாதன், வி. இராமலிங்கம், கே. பரஞ்சோதி.

கௌரவ காரியதரிசி: திரு. க. ஜெயபாலசிங்கம்.

உப காரியதரிசி: திரு. கே. செல்வரத்தினம்.

தனாதிகாரி: திரு. வி. வேலாயுதபிள்ளை.

ஏழுபேர் கொண்ட விளையாட்டு நிர்வாகக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்துடனும், யாழ்ப்பாணம் உதை பந்தாட்டச் சங்கத்துடனும் இக்கழகத்தை இணைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## "நடன ஆசிரியர் இதர பாடங்களை கற்பிக்கிறார்"

— எம். பி.

கொழும்பு, புதன்

அரசினர் பாடசாலையொன்றில் நடன ஆசிரியராக நியமிக்கப்பட்ட ஒருவர், இசைக்கருவிகள் அந்தப்பாடசாலையில் இல்லாத காரணத்தால், நடனத்தை விட்டு வேறு பாடங்களைப் படிப்பிக்கின்றார்.

அக்மீமன எம். பி. திரு. சேனபால சமரசேகரா மேற்கண்ட விபரத்தை தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் நாளை பார்லிமெண்ட் கூடும் பொழுது பின்வரும் கேள்விகளை கல்வி, வானொலி, ஒலிபரப்பு மந்திரியிடம் கேட்பார்.:

பட்டுவ அரசினர் பாடசாலையில் ஒரு நடன ஆசிரியர் எப்போது நியமிக்கப்பட்டார்? இசைக்கருவிகள் இல்லாதகாரணத்தினால், அந்த நடன ஆசிரியர் வேறு பாடங்களைப் படிப்பிப்பதை அவர் உணர்வாரா?

# பெண்ணை கடத்தி சென்றதாக வழக்கு

## ஒரு எதிரிக்கும், மூன்று சாட்சிகளுக்கும் வாரண்ட்

மாவிட்டபுரம், புதன்

சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பிராம்பத்தை அமெரிக்கன் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் புண்ணியமூர்த்தி அருந்தவம் என்னும் யுவதி பாடசாலைக்குச் செல்லுகையில் அவரை கடத்திச் சென்றதாய் பிராம்பத்தையைச் சேர்ந்த பொன்னுச்சாமி தங்கராசா, பொன்னையா குமாரவேலு, வல்லிபுரம் கந்தையா ஆகிய மூவர் மேலும் சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு வெஸ்லி டி' தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மூன்றாவது எதிரியான வல்லிபுரம் கந்தையா சுகயீனம் காரணமாக கோர்ட்டில் ஆஜராகவில்லையென வைத்திய அத்தாட்சிப் பத்திரம் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. நீதிபதி அதை ஏற்கமறுத்து மூன்றாவது எதிரியைக் கைதுசெய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

இவ்வழக்கில் 3ம், 4ம், 8ம் சாட்சிகளான தம்பையா விஜயலட்சுமி, திருமதி. ஆர். வி தங்கராசா, குசைப்பிள்ளை அந்தோனிப் பிள்ளை ஆகியோர் கோர்ட்டில் ஆஜராகாமையால் நீதிபதி அவர்களையும் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்து வழக்கை அடுத்த மாதம் 12ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வியாழன், 22-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 வயலின்.

இரவு 7-00 ரேடியோ டாக்டர்—பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாமாலை, 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள் காலை7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கோயம்புத்தூர் நிர்மலா ஸ்ரீநிவாசன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கோயம்புத்தூர் நிர்மலா ஸ்ரீநிவாசன்—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல்கள், 7-35 ஆர். நரசிம்மாச்சாரி—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி—முடிகொண்டான் வேங்கடராமய்யர்—பாட்டு, 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகில பாரத இன்றைய இலக்கியம்.




கெட்டியான உணவு அருந்துவதற்கு

உங்கள் குழந்தையை சிறந்தமுறையில் பழக்கிவிட்டீர்களா?



அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில்வைத்திருக்க வேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவை சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

★ உணவை மாற்றும் பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்றாகச் செரிக்கக்கூடிய கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்கவேண்டும்.

மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ள வேண்டிய காலம். 50வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் ரஸ்குகள்தான் பாலுடன் சேர்த்து ஊட்டக்கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.

பார்லீஸ் தானியப்பொருள்கள், கனிப் பொருள்கள் விட்டமின்சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்துவிடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.






FARLEY'S

பார்லீஸ்

குழந்தைகளின் முதல் கெட்டியான உணவு

# கலை அரங்கம்

## ஸ்ருடியோவில் சாவித்திரி தோசை சுட்டார்!

இதுவரை படப்பிடிப்புகளில் சினிமாவுக்கு என்று காகிதப் பழங்களும் அட்டைக் காட்சிகளும் தான் செய்து வைப்பார்கள். ஆனல் சரவண பிலிம்ஸாரின் உரிமையாளர் ஜி. என். வேலுமணி நெப்டியூன் ஸ்ருடியோவில் ஒரு முழுத் தியேட்டர் வாடகைக்கு எடுத்து அதில் கட்டையாலேயே சுமார் 20,000 ருபாய் செலவில் பிரமாண்டமான வீடு "செட்" போட்டுள்ளார். இதில் சமையல் அறை செய்து வைத்து அப்படியே கட்டப்பட்டிருக்கிறது. வீட்டில் உள்ளது போல் அடுப்பு, தோசை மாவு, நெய் எல்லாம் படப்பிடிப்பிற்காக வைத்திருந்தார்கள். திரையுலக ஜோடி ஜெமினி கணேசன்—சாவித்திரி இக்காட்சியில் நடிக்க வந்தார்கள். காலையில் சரியாக டிபன் செய்யாமல் வந்து விட்டதால் சாவித்திரியை நெய் தோசை சுட்டுக் கொடுக்கச் சொன்னர் ஜெமினிகணேசன். உடனே சாவித்திரி அடுப்பு பற்றவைத்து தோசை சுட்டுக் கொடுத்தார். ஜெமினிகணேசன் மிளகாய்ப்பொடியும் நெய்யும் விட்டுக்கொண்டு சாப்பிட ஆரம்பித்தார். இதைக் கண்டு செட்டில் இருந்த டெக்னீஷியன்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். செட்டில் இருந்த மற்றவர்களுக்கும் சாவித்திரி தோசைசுட்டுக் கொடுத்தார். கடைசியில் நாலு முறுகல் தோசை சுட்டுக்கொண்டு அவரே சாப்பிட உட்கார்ந்து விட்டார்.

## சந்திரபாபு இனி மதுபானம் அருந்துவதில்லையென சபதம்

இரண்டு வாரத்திற்கு முன் தாங்கமுடியாத வயிற்றுவலியால் சென்னை ஆஸ்பத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்ட சந்திரபாபு குணமடைந்து இல்லம் திரும்பினர். அவர் [illegible]ல்கள் புண்ணகி இரு[illegible]தாக டாக்டர்கள் கூ[illegible]ன்றனர். இனி அவர் ம[illegible] அருந்தினல் உயிருக்கே [illegible] ஆபத்து என்று எச்சரி[illegible]ள்ளனர். "இனி மது அருந்தமாட்டேன்" என்று பாத்திமாமாதாமீது சத்தியம் வைத்துவிட்டார் பாபு.

### 'ஆலயமணி'யில் கண்ணதாசன் பாட்டு

கல்லெல்லாம் மாணிக்கக்
கல்லாகுமா
கலையெல்லாம் கண்கள்
சொல்லும் கலையாகுமா?

என்ற கருத்துநிறைந்த பாடலை டி. எம். சௌந்தரராஜன்—ராஜேஸ்வரி பாட விசுவநாதன்—ராமமூர்த்தி இசையமைக்க மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் டி. எஸ். ரங்கசாமி ஒலிப் பதிவு செய்தார். பிரபல வில்லன் நடிகர் பி. எஸ். வீரப்பா தயாரிக்கும் "ஆலயமணி" என்ற படத்தில் இப்பாடலைக் கேட்கலாம். இப்படத்தில் சிவாஜி கணேசன், சரோஜா தேவி, எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, பி. எஸ். வீரப்பா மற்றும்பலர் நடிக்கின்றனர். ஜாவர் சீதாராமன் கதைவசனமெழுதும் இப்படத்தை சங்கர் டைரக்ட் செய்கிறர்.

### நமபியார் கதாநாயகன்

மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரிக்கும் சமுகப்படத்தில் எம். என். நம்பியார் கதாநாயகனை நடிக்கிறர். மற்றும் எம். ஆர் ராதா, டி. எஸ். பாலையா, ரங்கராவ், ராஜசுலோசன, புஷ்பலதா ஆகியோர் நடிக்கிறர்கள். மாறன் வசனம் எழுத டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்கிறர்.

நாடக விமரிசனம்

### 'பண்பின் சிகரம்'

மாவிட்டபுரம் முத்தமிழ் கலை மன்றத்தினரால் 'பண்பின் சிகரம்' என்ற நாடகம் மகாஜனக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. "மீரா என்ற முலையூர் தமிழ்ப்பெண்ணைக் காதலித்த கரீம் என்ற முஸ்லீம், தன்னை எதிர்த்த நாட்டாண்மைக்காரன் காராளியைக் குத்திவிட்டு ஓடுகிருன். காராளியின் நண்பர்கள் துரத்தவே ஓடிய கரீம் ஒரு கிழவன் வீட்டில் தஞ்சம் புகுகிருன். கரீமைப் பாதுகாப்பதாகக் கூறிய கிழவன், இறுதியில் கரீம் கொன்றது தனதுமூத்த மகன் காராளி என்பதைத் தனது இரண்டாவது மகன் குணசீலன் மூலம் அறிகிருன்; அதிர்ச்சி அடைகிருன். புத்திர பாசம் ஒருபுறம் வாக்குறுதி இன்னேர் புறமாகத் தண்டாடிய கிழவன், இறுதியில்:

"இன்ன செய்தாரைஒறுத்தல்
அவர் நாண நன்னயம்
செய்துவிடல்"

என்ற தமிழன் பண்பாட்டின் படி கரீமை மன்னித்துப் பண்பின் சிகரமாகத் திகழ்கிருன்" இதுதான் கதை.

இந் நாடகத்தில் கரீம், காராளி, குணசீலன் முதலிய பாத்திரங்கள் தாங்கி நடித்தவர்கள் பலவித சிக்கல் நிறைந்த கட்டங்களில் தமது பாத்திரத்தை உணர்ந்து பல்வேறு உணர்ச்சிகளையும் வெளிக்காட்டி நன்கு நடித்தனர். காராளியுடன் மோதிய இடத்திலும், பின்னர் தவித்துத்தவித்து ஆலால சுந்தரரிடம்அடைக்கலம் புகுந்த வேளையிலும் தன்னல் குத்தப்பட்ட காராளியின் தந்தைதான் ஆலால சுந்தரர் என்பதை உணர்ந்த வேளையிலும், ஆலாலசுந்தரர் தன்னை மன்னித்த நேரத்திலும் சரிமாக நடித்த நா. கருணைநிதி மிகத் திறம்பட நடித்து இரசிகர்களின் பாராட்டைப் பெற்ருர். காராளியாக வந்தவர் தோற்றமும், பேச்சும் நடையும் அசல் கிராமத்து நாட்டாண்மைக்காரனகவே காட்டியது. குத்தப்பட்டவேளை அவர் தவித்த தவிப்பு இரசிகர்களை மெய்சிலிர்க்கச் செய்தது.

அண்ணன் குத்தப்பட்டதைப் பார்த்த தம்பி குணசீலன் படபடப்பும் கரீமை காப்பாற்ற முனைந்த தந்தைமேல் சீறிய வேளையிலும் வீரஉணர்ச்சி கட்டுமீறிப் பிரவாகித்தது. காராளியாக குலசிங்கமும், குணசீலனக சிவலிங்கமும் நடித்தார்கள். ஆலால சுந்தரராக நடித்த இயக்குனர் ஏ. ரி. பொன்னுத்துரையின் நடிப்பில் சாந்தமும், அமைதியும் நிலவியது. தன் மகன் கொல்லப்பட்டான் என்பதை அறிந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியும், பின்னர் பல இன்னல்களுக்கிடையே கரீமைப் பாதுகாக்கும் வேளையிலும் அவர் நடிப்பின் சிகரத்தையே எட்டிப் பிடித்துவிட்டார். நகைச் சுவைப் பாத்திரம் தாங்கிய ராசாவின் நடிப்பில் சற்று அபரிமிதம் இருந்ததாயினும் சில கட்டங்களில் அவர் நடிப்பு இயற்கையாக இருந்தது.

நாடகம் தொடங்கிய நேரம் தொட்டு முடிவுவரை எவ்வித தடையுமின்றிக் கண்மூடி விழிக்கும் நேரத்துள் காட்சிகள் மாறி மிகவும் சிறப்புடன் அமைந்திருந்தது. ஆயினும் நாடகத்தில் பல குறைகள் இருந்தன. தெருக்காட்சிகள் சற்றுச்சுருக்கமயா இருந்திருக்கலாம். தெருக் காட்சியில் காராளியால் வெட்டி எறியப்பட்ட வாழைமரக் குத்திகள் மாளிகைக் காட்சியிலும் எடுக்கப்படாது இருந்தன. மீரா, தங்கம் என்ற பெண்பாத்திரங்கள் தாங்கியவர்கள் நடிப்பு எடுப்பாக இருந்ததாயினும் மேக்கப்' சிறப்புடன் அமையவில்லை. ஐந்து பேர் கத்தி தாங்கவேண்டிய அவசியமில்லை. சில இடங்களில் இளம் நடிகர்கள் வசனத்தை அவதியாகப் பேசினர். வி. வி. வைரமுத்து கோஷ்டியினரின் இசையமைப்பு அபாரம். இந்த நாடகத்தின் வெற்றிக்கு திரு. ஏ. ரி. பொன்னுத்துரையின் ஆற்றலே காரணமெனின் அது மிகையாகாது.

—இரசிகன்.

## தொழில்கோர்ட் ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

வங்கி ஊழியர் வேலைநிறுத்தம்பற்றி விசாரணை செய்ய திரு எஸ். பி. யட்டவர தலைமையில் நியமிக்கப்பட்ட தொழில்கோர்ட் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தேர்தலை ஒத்திவைக்க முடியாது

ஸ்ரீநகர், பெப். 21

ஜம்முவில் தேர்தலை ஒத்திப் போட வேண்டுமென்றும்,வாக்குப் பெட்டிகள் சில சரியான முறையில் இருக்கவில்லையென்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்த குறைபாட்டை தலைமை தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் நிராகரித்தார். இவ்வித நிலைமைக்கு தக்க ஏற்பாடுகள்செய்யப்படுமென்றும், தேர்தலை ஒத்திவைக்கச்சட்டம் கிடையாதென்றும் அவர் கூறினர்.

## 'கொஞ்சும் சலங்கை' படத்தில் மாறுதல்கள்

40 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு தேவி பிலிம்ஸாரால் வெளியிடப்பட்டுள்ள "கொஞ்சும் சலங்கை" படத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. படத்தில் பிற்பகுதி சரியில்லையென்று பத்திரிகையாளர்கள் குறை கூறியிருந்தனர். அதோடு ஒரு இடத்தில் வரும் வசனத்தை தி. மு. க.வினர் எதிர்த்தனர். இம்மாதிரி காட்சிகள் இப்போது வெட்டப்பட்டுவிட்டன. "வசந்த காலத் தென்றலில் ஒரு வண்டு" என்ற பாடலும் குசலகுமாரியின் ஆறுநிமிட நடனமும் வெட்டப்பட்டுள்ள மற்றப் பகுதிகள். இதனல் படத்தின் பிற்பகுதியும் இப்பொழுது விறுவிறுப்பாக அமைந்துள்ளதென்று சொல்லப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

## சுழிபுரம் கிராமசபைக்கு புதிய தலைவர் வேண்டும்

இம்மாதம் 23-ந் திகதியன்று நடைபெறவிருக்கும் சுழிபுரம் கிராமசபைத் தேர்தலில் ஓர் மாற்றம் ஏற்படாவிடில் பழைய நிலையிலேயே எங்கள் சபை இயங்கும் என்பதை அங்கத்தவர்கள் அனைவரும் நன்குணர வேண்டும்

இம்முறை நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பதினறு அங்கத்தவர்களுள் பன்னிரண்டு பேர் புதிய அங்கத்தவர்களாக இருப்பதால் வாக்காளப் பொதுமக்கள் இம்முறை ஓர் புதிய நிர்வாகத்தை அமைக்க வேண்டுமென்ற நன் நோக்கத்தை முன் நோக்கியே இந்நாளில் பன்னிரு புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்திருக்கிறர்களென்பது தெட்டத் தெளிவாகிறது.

ஜனநாயக ஆட்சியிலே அனைவருக்கும் உரிமை வழங்கப்படுவது எல்லோருக்கும் தங்கள் திட்டங்களையும் திறமையையும் அமுல் நடத்துவதற்கு ஓர் சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டே. ஒருவர் சுடந்த ஒன்பது வருடகாலமாக கடமையாற்றிய பின்னரும் தொடர்ந்து தலைமை வகித்கால் எப்படி மற்றவர்கள் தங்கள் திறமையைக் காட்ட முடியும்? கிராமம் எப்படி முன்னேறும்? ஆசையால் கிராமம் முன்னேற ஓர் புதிய நிர்வாகத்தை அமைக்கும்படி தாழ்மையுடன் வேண்டிச் சொள்ளுகிறேன்.

சு. தம்பிநயினர்
12-ம் வட்டார அங்கத்தவர்
பண்ணகம்

## கிளனுக்கு பொது கௌரவம்

வாஷிங்டன், பெப். 21

அமெரிக்க வானவெளிப் பிரயாணி கிளனை இரு தினங்கள் வைத்தியர்கள் பரிசோதனை செய்வார்கள். அவர் தற்போது தங்கியிருக்கும் இடத்திற்கு உபஜனதிபதி லிண்டன் ஜோன்சன் சென்று கேப்கனவரோலுக்கு அவரை அழைத்துவருவார். கிளனைக் கௌரவிக்க நடைபெற விருக்கும் பொது விழாவில் பங்கு பற்றும்பொருட்டு ஜனதிபதி கென்னடி கேப்கனவரோலுக்குச் செல்வார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்.

யாழ்ப்பாணம் மனேகரா ஜெமினி கணேசன், பத்மினி நடித்த மீண்ட சொர்க்கம்


வேது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) · வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

குயின்லன் (நுவரெலியா)

காமினி (மருதானை)

வாரநாட்களில் மட்டும் தினசரி பிற்பகல் 2 மணிக்கு

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி,
எஸ். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா,
எம். என். நம்பியார்
நடித்த
பாச மலர்
திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனேகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன்
பத்மினி
நடித்த
மீண்ட சொர்க்கம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள ஈழநாடு அச்சகத்தில் 1962 ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.